S.469

ஓ

பரமபதி துணை.

உ ரோமரிஷி

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாடை 300

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மூ. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

ஓலையேட்டுப் பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம. குருசாமிக்கோனர் சன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக்கோனர் தெரு

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு.)

இதன் விலை) 1937 (அணு 12.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

பரமபதி துணை.

இந்நூல் அச்சிட்டோர் கருத்து.



இத்தச் சாஸ்திரம் ஐந்துகாண்டம் ஐந்நூறுபாடல்கள் என்னிடம் மூன்னிருந்ததை ஒருபரதேசியார் அதனைப்பார்த்து எழுதிக்கொண்டு தருகிறேனெனக்கேட்க, அவ்விதம் முழுதுங்கொடுக்க இஷ்டமில்லாது முதலிரண்டு காண்டத்தை மட்டும் அவரிடம் கொடுத்துப் பெற்றுக் கொண்டுபோனவர் இதுவரையிலும் கொண்டுவந்து கொடாததால், மற்றும் அனேக மகான்களிடமும் விசாரித்ததில் இச்சாஸ்திரம் அகப் படவில்லை. பின்னர் இவையேனும் அச்சிட்டு வெளியிடவேண்டு மென்ற எண்ணங்கொண்டு மூன்றாங் காண்டமுதல் ஐந்தாங்காண்டம் வரை 300 பாடல்களைமட்டும் சுத்தப்பதிப்பாக நயம் காகிதத்தில் அச் சிட்டு எவரும் எளிதில் வாங்கிப் பார்த்துணரும்பொருட்டு சொற்ப விலையே ஏற்படுத்தி யிருக்கிறேன்.

இச்சாஸ்திரம் ஓலையேட்டுச்சுவடியாய் வைத்திருக்கும் மகான்கள் மேற்கூறிய முதலிரண்டு காண்டத்தைமட்டும் அனுப்புவரேல் அவரது பெயர் சகிதம் அதனை அச்சிட்டு வெளியாக்குவதுடன் அவர்க்கொரு புஸ்தகமும் அனுப்புவதோடு அவரது நன்றியையும் என்றும் மறக்கத் தக்கதன்று. (இ. ராம. கு)

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக் கோனர் சன்,

குரு. இராமசாமிக் கோன்,

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.



ஓ

பரமபதி துணை.

உரோமரிஷி

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை

3-வது காண்டம் 100

காப்பு.

படுக்காண்ட மானதொரு மூன்றுங்காண்டம்
நன்மைபெறப் பாடுதற்கைங் கரனேகாப்பு
மூடுக்காக வெனையாண்ட சோதிபாதம்
முனியாக நின்றதொரு அய்யர்பாதம்
திடுக்கென்ற புசுண்டருட உத்காரத்தால்
திறந்துரைத்தேன் உரோமரிஷி ஐந்நூறுக
படுக்காண்ட யிந்தநூல் மூன்றுங்காண்டம்
பராபரமாம் புசுண்டருட காப்புத்தானே. (1)

நூல்.

காப்பென்ற யிந்தநூ லுலகிலில்லை
கபடற்றுச் செய்ததினு லடக்கஞ்செய்தார்
காப்பென்ற சித்தரெனைக் கோபஞ்செய்து
நானுரைத்த காண்டமதைக் குகையில்வைத்தார்
சாப்பென்ன பதினெண்பேர் மறைப்பையெல்லாம்
சங்கைமறை வில்லாமல் வெளியதாக
காப்பென்ற காண்டமொரு நூறுய்ச்சொன்னேன்
கடனமிடும் பராபரமே சோதிதானே. (2)

சோதியாய் நின்றவழி தீட்சையெல்லாம்
சொல்மறைவு ஒன்றுமில்லை உணர்ந்துபார்த்தால்
சோதியடா செகசோதி யென்னசொல்வேன்
சோதித்தாற் ரோணுமடா ரெண்டாங்காண்டம்
சோதியடா குகைமறைவா யிருந்தநூலைச்
சொற்றவரு ஞானிகட்கே யெய்துமெய்தும்
சோதியடா மனம்வைத்து அறிவில்நின்ரூல்
சொல்லொன்றே பராபரமாய்ச் சொன்னேன்நானே. (3)

பராபரமாய்ப் பகுத்துரைத்தே னிந்தநூலைப்
பாரினிலே ஐந்நூறை வெளியாய்விட்டேன்
தாராதரமாய் வெகுசித்தர் சொன்னநூலைத்
தஞ்சமென்று யானுரைத்தேன் இவ்வைந்நூறை
நிராதரமாய் வெகுநூல்கள் சித்தர்சொன்னர்
நேராக முன்னேநூற் சொல்லிவிட்டேன்
வராததொரு பரிபாஷை ஐந்துகாண்டம்
மகாஅருமை யானுரைத்தே னடுமைதானே. (4)

அடுமையா னுறுகாண்டப் பொருளாராய்ந்து
ஆயிசொன்ன அதிகாரப் படிக்குத்தானும்
கடுமையாங் கபடுகுற்றந் தன்னைநீக்கி
கருணையாந் தயாளிதியாம் பரமெய்ஞானம்
கொடுமைதான் பரமனருட் படியேநானும்
கூறினேன் ரிஷிகளுந்தான் பிழைக்கவென்று
கடுமைதான் கனபாடு பட்டுப்பட்டு
கடாட்சித்தார் பரமசிவ ஞயன்ரூனே. (5)

தானென்ற ஆணவத்தை நீக்கியிந்தத்
தாரணியில் மனுக்களெல்லாம் பிழைக்கவேதான்
தானென்ற அய்யர்சொன்ன மொழியினாலே
தடதடத்து ஐந்துகாண்டந் தானேசொன்னேன்
தானென்ற அய்யர்சொன்ன உபதேசத்தால்
தனிக்கூர்ந்து சவுக்காரங் கருதிச்சொன்னேன்
தானென்ற அய்யர்பதஞ் சிரசில்வைத்துத்
தாயான காரசாரம் வகுத்தேன்பாரே. (6)

பாரென்ற காயசித்தி உப்பினுலே
பறந்தோடுங் குளிகையெல்லா முப்பினுலே
வாரென்ற வாதமெல்லா முப்பினுலே
வாசியுள்ளே யாடுவது முப்பினுலே
பூரென்ற புடசயமு முப்பினுலே
பொன்னெடிப் பழுப்பதுவு முப்பினுலே
ஆரென்ற அஷ்டாங்க முப்பினுலே
அதிதமா முப்பாலே யெல்லாமாச்சே. (7)

ஆச்சென்ற உப்பறிந்து சொன்னேன்வாதி
ஆங்கார ஐம்புலனை யறுத்தோன்யோகி
நீச்சென்ற ஆறுதல மூருவியேறி
நிராதார மாறையுந்தா னறிந்தோன்ஞானி
கூச்சென்ற குழப்பமதி லமுதம்வாரிக்
கொள்கியே பாணித்தோன் குருவுமாகும்
தீச்சென்ற விடங்கண்டு சிகாரத்தியை
சேர்ந்திட்டோ னவன்பிறவி யறுத்தான்காணே. (8)

காணவே கற்பங்கள் தின்னும்போதும்
கனமான யோகங்கள் பார்க்கும்போதும்
வேணவே வெகுபாடாய் வெருத்துக்காணும்
மீளாதே மனத்திடமாய் மீறிப்பாரு
ஊணவே உள்மகிழ்ச்சி யனேகங்காணும்
உற்றுமே பிடித்ததெல்லாஞ் சித்தியாகும்
ஆணவே வாதத்தி னதிசயங்கள்
அடங்காது யேடுதனில் முடிவாகாதே. (9)

ஆகாத மனந்தன்னை மறித்துவெட்டி
அஞ்சுரு ஆணியைப்போல் அடித்துஊணு
போகாத பொரிவழியே போனபெண்ணைப்
பின்தொடர்ந்து பிடியாதே காமத்தியால்
சாகாத காலேது யென்றுபாரு
தைரியமாய் வேகாத தலையைப்பாரு
ஏகாத யெவ்வுபிருந் தன்னுயிர்போலெண்ணு
வேதது வீக்கினமு மிழந்துபோடே. (10)

இழந்திட்டுச் சமாதியிலே யிருந்துகொண்டு
எளிதாகக் கற்பத்தை விடாமலுண்ணு
உழந்திட்டு ருசிதன்னை யொளித்துப்போடு
உத்தமித்தாய் பதம்போற்றிப் பானம்பண்ணு
எழிந்திட்டு வாதத்தை வரிசையாக
ஈசனமா யடிதொடுத்து உயரயேறு
நழிந்திட்டுக் கைமுறைகள் நழுவிடாமல்
நாடியே சாஸ்திரத்தை நன்றுய்ப்பாரே. (11)

பாரென்றுற் சும்மாதான் பார்க்கப்போமோ
பாபமையைப் பூசித்தாற் பார்க்கலாகும்
தூரென்றுற் சாஸ்திரத்தை நிலைக்கொட்டாது
சுத்தசை தன்னியமாய் நூலைப்பாரு
காரென்றுல் வாசியைநீ மறந்திடாமற்
காலூணி உறைத்தாக்கால் கருவெல்லாந்தோணும்
வாறென்ற மாயையைத்தா னறுத்திட்டாக்கால்
வாராது நித்திரைபசி சோம்பல்போமே. (12)

சோம்பலா யிருந்தாக்கால் காயசித்தியாமோ
சுணங்கலாய்த் திரிந்தாக்கால் வாதசித்தியாமோ
கூம்பலாய் மனம்போனுல் யோகசித்தியாமோ
குளிகைக்குச் சாரணைதா நீரேயானுல்
ஆம்பலா யாகாச கெவுனம்போமோ
அடியான வழலிவிட்டால் சித்தனுமோ
காம்பலாய்க் காமத்தின் வழியேசென்றுல்
காலூணும் சிவயோகக் கருத்தில்நில்லே. (13)

நில்லான சராசரங்கள் சீவராசி
நிலையான புவனமொடு அண்டமெல்லாம்
வல்லான பூரணத்தி லுதிப்புக்கண்டாய்
மருவிநின்று யெவ்வாறு உதித்துதென்றுல்
உல்லான யெழுவகையாம் யோனிநாலு
உற்றுக்கேள் அண்டமொடு மண்ணும்தண்ணீர்
கல்லான யோனியொடு நாலிற்றுணும்
கருவான விந்துவொடு போதமாச்சே. (14)

ஆச்சென்ற அண்டத்து நீரைத்தானும்
அடுக்கடுக்காய் மேகம்நின்று வருஷித்தாப்போல்
தேச்சென்ற சென்மமங்கே செனித்தவாறு
சேர்ந்தோடி ஆசையென்ற பாசம்நீங்கி
வாச்சென்ற வண்டோடி மதுவையுண்டு
வாசனையாற் சென்பகத்துள் மாண்டுபோகும்
போச்சென்ற பூரணத்தில் மருவிநின்றால்
பிறப்பற்றுச் சென்மமென்ற பிறவிபோமே. (15)

பிறவியத்துப் போகவென்றூற் பூரணத்திற்சேரு
பிறக்கவென்றூற் பெண்மாயை தனிலேநின்று
திரவியத்து ரெண்டையுந் தானறியவேண்டிச்
சீக்கிரத்திற் காயசித்தி பண்ணிக்கொள்ளு
சிரவியத்துக் குளிகையாற் றேசமெல்லாம்
சிறப்பாகப் பாரங்கே சென்றுசென்று
உரவியத்து உலகத்தின் மாயம்பூண்டால்
ஒளியாகப் பிறவியினி லுழலுவாயே. (16)

பூறவே வறுமைவர்து மூண்டதென்றால்
அளிம்பான மனக்குரங்கால் ஞானம்போச்சு
தேறவே வேதாந்த சித்தாந்தம் ரெண்டும்
சென்தத்திலே சென்றுவிடுஞ் சேரப்பொய்யாம்
பாறவே பசியதனால் மனம்பேயாகிப்
பாக்கியங்க ளற்றதினால் கல்லுப்போல
வாறவே வாசியொடு சமாதிநிஷ்டை
வறுமையாற் சகலமுமே மண்ணாய்ப்போமே. (17)

போகாம லாயிதம் பூசைபண்ணு
போக்கோடே ஆதாரம் புக்கியேறு
வேகாம லும்புலனே விரைந்துசாடு
வேண்டியதோர் கற்பமுண்டு சித்தியாக்கு
தேகாமற் சீவனத்துக் கிடமேயாகச்
செப்பியதோர் நவபோகக் களங்குபண்ணு
நோகாமற் சீவசெந்து தன்னுயிர்போலெண்ணு
நட்பமாய் வேதாந்த நுணுக்கம்பாரே. (18)

பாரடா உள்ளமதைத் தினமும்மைத்தா
பங்கிகொண்டு சுத்தமுடன் பார்த்தாயானால்
பேரடா பெற்றதொரு உள்ளத்தானும்
பெருமையுடன் தான்பழுக்கு முருமைவந்து
காரடா கருணைவள ரமுதபோதம்
கண்ணிறைந்த போதமதால் யோகசித்தி
சாரடா சராசரமே தானுய்நின்று
சங்கற்ப விகற்பமெல்லாஞ் சார்ந்துதள்ளே. (19)

தள்ளுவது யாரையென்றுல் மைந்தாகேளு
தன்னுணர்வு யில்லாத சமயத்தோரை
உள்ளுணர்ந்து வுள்ளமதைக் காணுர்தன்னை
உற்றசிவ சத்திபத மறியார்தன்னை
நல்லுணர்வாய்ப் பேசாத நாய்கள்தன்னை
நாதாந்த வேதமதைக் காணுர்தன்னைச்
சொல்லுணர்வாய் நாவில்வைத்துப் பேசவேண்டாம்
சோதிமய மானசிவ ஞானம்பாரே. (20)

பாரடா சிவஞான மென்னவென்றுற்
பாருலகிற் நின்றவுயிர் பயிர்களெல்லாம்
நேரடா தன்னகம்போற் காண்வேணும்
நேர்மையாய்ச் சந்திப்பாய் நிற்கவேணும்
காரடா சகலகலைக் யானமெல்லாம்
கருத்துகந்து பூரணமாய்க் காணவேணும்
மேரடா மேருகிரி யந்தங்கண்டால்
விள்ளாத பொருளதுவும் விளங்கும்பாரே. (21)

பாரான உலகமதே மாயவாழ்க்கை
மகத்தான வாழ்க்கையிலே மருவிநின்று
நேரான நிச்சயத்தை யறியாமற்றுன்
நிசமான வெளியென்றும் ஒளிதானென்றும்
பேரான பரனென்றும் பிர்மனென்றும்
பெருகிநின்ற சத்தியென்றுஞ் சிவன்தானென்றும்
கூராத யின்பமென்று மெண்ணியெண்ணி
கொண்டுநின்ற நிச்சயத்தை யறியார்காணே. (22)

காணவே நிட்சயத்தைக் காணவென்றுல்
கண்ணேது வாயேது கருத்தங்கேது
பூணவே நின்றஅண்டத் தப்பாற்பாரு
பொருந்திநின்ற பூமியின்கீ ழுற்றுப்பாரு
ஊணவே நின்றகெதி பார்த்தாயானுல்
உலகேது நீயேது நான்தானேது
பேணவே பார்க்கஅந்த மயமாய்ப்போகும்
பேசிப்பார் சூட்சமதின் காட்சிதானே. (23)

காட்சியென்ற காட்சிகண் காட்சிகாணும்
கலந்தஒன்றுய் நின்றபொருள் சூட்சமாச்சு
மோட்சமென்ற சூட்சமது தானுமென்று
மோனமுடன் தானிருந்து போதமாக
பேட்சான மூச்சறிந்த வடிவேயோகம்
பெலமான யேகபரி பூரணமேதானுய்
சூட்சமென்ற சூட்சமது போதமாகச்
சூட்சாதி சூட்சமூட னிருப்பார்காணே. (24)

காணவே குருமுனிவர் பரிபாஷையைநூறில்
கனிவாகச் சொன்னதொரு நூலுக்கொக்கும்
காணவே சௌமியமா பிரத்திருநூறில்
கனமான அஷ்டாங்க மிதுவுமொன்று
காணவே யாசனமும் யோகஞ் சொன்னுர்
கபடத்துச் சொன்னதுவு மிதுவுமொன்று
காணவே போகர்யே முயிரத்தில்
கண்டெடுத்த படிசொன்னு ரிதுவுமொன்றே. (25)

ஆசன விதி.

ஒன்றேதா னாசனத்தின் விரிவுசொல்வேன்
ஓகோகோ கோத்திகஆ சனத்தைக்கேளு
சுண்டேதான் முழந்தாளாம் குளச்சிரெண்டில்
குணமாகப் பதிந்திருக்கக் கோத்தீகமாச்சு
கண்டேதா னாசனத்தைக் கருதிக்கேளு
கருவான ஓட்டியான பெந்தம்பண்ணி
பிண்டேதான் முழங்கால்மேல் கரங்கள்வீட்டி
பிராணனென்ற தாரணையைப் பார்ப்பார்பாரே. (26)

பார்க்கவே பத்திரஆ சனத்தைக்கேளு
பதிவாகத் தானிருத்து காலிரண்டும்
கார்க்கையிலே பின்னுலே கையைக்கட்டிக்
கண்ணைநிந்து தானேக்கப் பத்திராசனமாச்சு
சார்க்கவே முத்திரா சனத்தைக்கேளு
சங்கையுடன் கரடுமேற் கரடுபோட்டு
சேர்க்கவே குதத்துக்குள் குதிங்கால்வைத்துச்
செம்மையுடன் தானிருக்கத் திறந்தானுமே. (27)

ஆகுமே கோமுகா சனத்தைக்கேளு
அங்கமுடன் முழங்கால்மேல் முழங்கால்போட்டு
தாகுமே பாதம்ரெண்டில் கையையூணித்
தானிருக்கக் கோமுகா சனமுமாச்சு
காகுமே வீரமென்ற ஆசனத்தைக்கேளு
காட்டமூட னிடக்கால்மேல் வலக்கால்போட்டு
ஓகுமே கோமுகம்போ லிருந்துகொண்டால்
உத்தமனே வீரமென்ற துறுதிபாரே. (28)

உறுதியுள்ள பற்பஆ சனத்தைக்கேளு
உண்மையுடன் பாதம்ரெண்டுந் துடைமேலேற்றி
சுருதியுடன் கைரெண்டு முழங்கால்வைத்துச்
சுத்தமுடன் தன்னகத்தைச் சுகமாய்ப்பார்க்க
பருதியுள்ள பற்பஆ சனமிதென்று
பதிவான வேதாந்தப் பெரியோரெல்லாம்
வருதியுட னெக்கியமா முனிதான்சொல்ல
மகத்தான ஆசனத்தை மகிழ்ந்தார்காணே. (29)

காணவே மயூரஆ சனத்தைக்கேளு
கருணையுடன் கைரெண்டுந் தரையிலூணி
ஊணவே முழங்காலே உந்தியிலேவைத்து
உகந்துநின்ற சிம்மம்போ லுகந்துநில்லு
பேணவே சுகமுற்ற ஆசனத்தைச்சொல்வேன்
பேணிமனங் கொண்டபடி யிருக்கஇன்று
பூணவே ஒன்பதுவின் விபரஞ்சொன்னேன்
பூரணமாய்ப் பிராணுயப் பொருளுக்கேளே. (30)

பிராணய விதி.

பொருளான ரேஷகத்தான் விடுவதப்பா
புத்தியுடன் பூரகத்தான் உள்ளேவாங்கல்
அருளான கும்பகத்தா னண்டத்தெய்தல்
அரகரா சௌபீஷ மந்திரமார்க்கம்
திருவான நிற்பீஷம் அந்திரத்தைவிட்டு
சிவசிவா வெளிதனிலே பூரித்தேகல்
ஊருவான அஞ்சுவிதம் வெளியாய்ச் சொல்வேன்
உத்தமனே ஆசனத்தி லிருந்துபாரே. (31)

மாத்திரை விபரம்.

பாரேநீ மாத்திரைதான் முப்பத்திரண்டு
பதிவாகப் பூரிப்பாய் மூலத்துள்ளே
சாரேநீ மாத்திரைதா னறுபத்தினலு
சங்கையுடன் கும்பித்துப் பாருபாரு
காரேநீ மாத்திரைதான் பதினாருகக்
கனிவாக ரேசிப்பாய் தவறில்லாமல்
நேரேநீ யிம்முறையாய்ப் பழக்கம்பண்ணி
நேர்மையுடன் பிரமதல மறிந்துஊதே. (32)

அறிந்துபிர்ம நிலையறிந்து நன்றூதி
அதின்பிறகு விஷ்ணுவிலே அமர்ந்துஊது
தெரிந்தருத்ர நிலையறிந்து திறமாஊது
சிவசிவா மயேஸ்வரத்திற் சேர்ந்துஊது
வரிந்தமன நிலையறிந்து மைத்தாமைத்தா
மகத்தான சதாசிவத்தில் வந்துகூடி
விரிந்ததலந் தனையறிந்து ஊதியேதான்
விள்ளுகிறேன் பிராணயம் ஒன்றதாச்சே. (33)

ஆச்சதுபார் பிராணய மறிந்துசெய்தால்
அரோகமென்ற பாபமெலா மகன்றுபோகும்
மூச்சதுபார் பிராணயஞ் செய்யச்செய்ய
முக்கியமுடன் தேகமதில் வேர்வைகொள்ளும்
நீச்சதுபார் மும்மலங்கள் கழிந்துபோகும்
நேர்மையுடன் நாடியெல்லாஞ் சுத்தியாகும்
காச்சதுபார் தசநாதங் காதிற்கேட்கும்
கருணையுடன் பிராணயக் கருவைக்கேளே. (34)

கேளுநீ யெட்டுவகைப் பருவமுண்டு
கிருபையுள்ள பிள்ளைகளே சொல்லக்கேளு
காலுடன்நீ கண்டுவெகு வேர்வையானுற்
கருத்துடனே கும்பிக்கும் ரெண்டாம்பட்சம்
வாளுநீ அக்கினிதான் சொலித்துநின்று
மகத்தான தீபனமா மூன்றும்பட்சம்
கோளுநீ யில்லாமல் வாசியேறிக்
குருபதியிற் தீபமுண்டாம் நாலாம்பட்சம். (35)

பட்சமுடன் தன்னறிவே சாட்சியானால்
பரிந்துபிர காசிக்கு மைந்தாம் பட்சம்
இச்சையுடன் குண்டலியிற் சத்தங்கொள்ளும்
என்மகனே சொல்லுகிறே னைந்தும்பட்சம்
அச்சமற யேழுக்குள் மைந்தாகேளு
ஆகாச கெவுனமடா அதிகமாகும்
மெச்சவே தூரதிருஷ்டி யறியப்பண்ணும்
மெஞ்ஞான மெட்டினுட மேன்மைகாணே. (36)

காணவே யெட்டினிலே திட்டமானால்
கற்பமென்றதீவினைகள் காணுதோடும்
பூணவே ஆதாரம் சித்தியாகும்
பூரணமும் காரணமும் பொருந்துமய்யா
தோணவே சொரூபமது சோதியாகும்
சுகசீவப் பிராணகலை சொலிக்கும்பாரு
பேணவே பிராணயம் பெலத்துதானுற்
பேரண்டஞ் சித்தண்டம் தான்தானுச்சே. (37)

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும்போது
தத்துவமாய் நின்றதொரு தொண்ணூற்றாறு
எண்ணத்தான் தொலையாத ஆசாபாசம்
யென்னசொல்வேன் பஞ்சகர்த்தாள் பஞ்சபூதம்
கண்ணைத்தான் தானறிந்து கண்ணின்கண்ணு
கலையான ரவிமதியுஞ் சுடர்கள்மூன்றும்
உன்னைத்தா னறிந்துமன துன்னிப்பார்க்க
உண்மையென்ற நிச்சயத்தை யுரைக்கொண்ணுதே. (38)

காணவே அஞ்சுபஞ்ச பூதந்தன்னைக்
கண்குவிந்து மனக்கண்ணுல் நன்முய்ப்பார்த்தால்
பேணவே மேருகிரி காணலாகும்
மேலான சதுரகிரி விலாசந்தோணும்
ஆணவே உனக்கீடார் சொல்லப்போரார்
அரகரா பூதவகை யறிந்துகொண்டால்
வேணவே நின்றகயி லாசந்தோணும்
விளம்புவேன் ஞானயிந் திரியங்கேளே. (39)

ஞானேந்திரியம்.

கேளடா ஞானயிந் திரியந்தன்னைக்
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்முய்க்கேளு
கூளடா தோத்திரந்தான் காதமாகும்
தொக்குவென்று சொன்னதுதான் தேகந்தேகம்
வாளடா சச்சுவென்முல் நேத்திரமாகும்
மகத்தான சிங்குவென்முல் வாய்தானுகும்
காலடா ஆக்கிராண மூக்குமூக்கு
கருணையுள்ள ஞானயிந் திரியமஞ்சே. (40)

அஞ்சான ஞானயிந் திரியந்தன்னை
அருளான மனக்கண்ணுல் நன்முய்ப்பாரு
நெஞ்சார அஞ்சுநிலை பார்த்துமைந்தா
நிலையான குருபதியில் நின்முயானுல்
மிஞ்சாமல் வாசியது தானேதானுய்
மெய்ஞான தீபமது விளங்கும்பாரு
தஞ்சமெனு மைந்துநிலை நன்முய்ப்பார்த்துச்
சங்கையுடன் கருமயிந் திரியங்கேளே. (41)

கர்மேந்திரியம்.

கேளடா வாக்குடனே பாதம்பாணிக்
கிருபையுடன் பாயுருவு முபஸ்தமஞ்சும்
சூளடா கருமலிந் திரியமஞ்சுஞ்
சுகமாகத் தானறிந்து சுத்தமானுல்
பாளடா போகாது ஞானமார்க்கம்
பக்தியுட னேந்தையுமே கண்டுதேர்ந்தால்
கோளடா ஒன்றுமில்லை வாசியேறும்
குறிப்பாக ஐம்புலனை நன்முய்ப்பாரே. (42)

புலனைந்து.

பார்க்கவே ஐம்புலனைப் பகரக்கேளு
பதிவான சத்தமொடு பரிசரூபம்
வர்க்கவே ரசமுடனே கெந்தமைந்து
இன்பமுள்ள ஐம்புலனென் றிதற்குப்பேரு
சேர்க்கையுட னைம்புலனைக் கண்டுமைந்தா
தேர்ந்துமன தறிவாலே தெளிந்துகொண்டால்
மார்க்கமுள்ள சித்தரென்று யார்க்குத்தோணும்
மைந்தனே ஐம்புலனை வகுத்துக்காணே. (43)

காணவே ஐம்புலனை வகுத்துப்பார்த்து
கருவான ஆதார மூலத்தேகி
தோணவே வாசியுட நிலையைக் கண்டு
சுத்தமுடன் வாசிதனி லேறியேறி
பூணவே அண்டவரை தன்னிற்சென்று
புத்தியுடன் சித்தமதாய் நின்றுயாளல்
ஊணவே கரணமந்தக் கரணம்நாலும்
உண்மையுடன் சொல்லுகிறே னுகந்துகேளே. (44)

கேளுநீ பூதலத்தில் யோகிஅய்யா
கிருபையுள்ள கரணமந்தக் கரணந்தன்னை
கோளுநீ யில்லாத மனந்தானென்று
கூர்மையுட னின்றிலங்கும் புத்தியொன்று
தேளுநீ ஆங்கார மானதொன்று
சிவசிவா சுத்தமென்ற சித்தமொன்று
ஆளுநீ கரணமந்தக் கரணம்நாலும்
அப்யனே அறிந்துகொண்டு ஆத்மம்பாரே. (45)

பாராம லாத்துமதத் துவந்தானய்யா
பதிவாக யிருபத்து நாலுஞ்சொன்னேன்
நேராகத் தானிருந்து ஆத்மலாபம்
நிலையறிந்து பெற்றதினல் வாசியேறும்
காராமல் வாசியிலைக் கருவைக்கண்டு
கருவாக ஆத்துமதத் துவத்தைப்பார்த்தால்
ஆராலுமுனக்குநிக ருண்டோ பிள்ளாய்
அப்பனே வித்யாதத் துவத்தைக்கேளே. (46)

கேள்மகனே வித்தியாதத் துவத்தைக்கேளு
கேள்வியென்ன காலியென்றும் நியதியென்றும்
சூள்மகனே கலியென்று மவித்தையென்றும்
சுகமான நாகமென்றும் புருடனென்றும்
காள்மகனே மாயையென்று யேழுமாச்சு
நன்மையுடன் வித்தியாதத் துவத்தைப்பார்த்து
ஆள்மகனே ஆதார தேகந்தன்னை
அறிந்துகொண்டு சிவதத்துவந் தன்னைக்கேளே. (47)

கேள்மகனே சிவதத்துவந் தன்னைமைந்தா
கிருபையுள்ள பிள்ளைகளே நன்றுய்க்கேளு
ஆள்மகனே சுத்தவித்தை யீசுரமுமைந்தா
அய்யனே சதாக்கியமும் சத்திசிவமைந்தும்
சூள்மகனே சிவதத்துவ மென்றுபேரு
சுகமான தத்துவங்கள் முப்பத்தாறு
வாள்மகனே உட்கருவி யென்றும்பேரு
மைந்தனே தானறிந்து தன்னைப்பாரே. (48)

பாரப்பா தன்னைமிகத் தானேகண்டு
பத்தியுட னுட்கருவின் மூலம்பார்த்து
கோரப்பா நின்றதினால் தத்துவத்தின்பெருமை
நீதியுடன் தோணுமடா நினைவாய்ப்பாரு
சாரப்பா மனதாரச் சார்ந்துபார்த்தால்
சார்வான தத்துவங்கள் தோணும்பாரு
ஆரப்பா அறிவார்கள் பூதமைந்து
அதிற்பிறந்த தத்துவந்தான் தொண்ணூற்றுமே. (49)

ஆரூன பூதமைந்தில் வரிசைகேளு
அப்பனே பிருதிவியின் கூர்தான்மைந்தா
கோரான மயிருடனே எலும்புசர்மம்
நிலையான நரம்புசதை யைந்துமாச்சு
போரான பிருதிவியின் கூருசொன்னேன்
பெருமையுடன் தானறிந்து பலமாய்நின்று
கூரான அப்புடைய கூருபாரு
குணமான பிள்ளைகளே கூர்ந்துபாரே. (50)

பாரப்பா அப்பினுட கூருசொல்வேன்
பதிவான நீருடனே உதிரமப்பா
காரப்பா சுக்கிலமு மூளைமச்சை
கருவான ஐந்துமடா அப்பின்கூரு
தேரப்பா அப்பினுட கூரறிந்து
தெளிந்துமன தொன்றுகத் தன்னைப்பார்த்து
சாரப்பா தன்னுணர்வால் பார்த்தால்மைந்தா
தனதான தேய்வினுட கூருகேளே. (51)

கேளப்பா தேய்வினுட கூருகேளு
கேள்வியென்ன பசியுடனே நித்திரையுமாகும்
சூளப்பா சேர்வதும் பயமுஞ்சோம்பு
தொகுத்துரைத்த தைந்துமடா தேய்வின்கூரு
வாளப்பா தேய்வினுட கூரறிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மனதாய்ப்பார்த்து
காளப்பா வலுவறிந்து பார்த்தாயானால்
கலியான வாய்வினுட கூருதானே. (52)

தானன வாய்வினுட கூருகேளு
தன்மையுள்ள பிள்ளைகளே கடத்தல்ஓடல்
உன்னன யிருத்தலொடு கிடத்தல்மைந்தா
உத்தமனே யெழுந்தலொடு ஐந்துமாச்சு
வானன வாய்வினுட கூரறிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மகிழ்ந்துபாரு
கோனன குருவருளாற் பார்த்தாயானால்
குணமாக ஆகாசக் கூருகேளே. (53)

கூரான ஆகாசக் கூருதன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
நேரான குரோதமொடு லோபமோகம்
நிசமான ஆச்சரிய மதமுமஞ்சு
வீரான ஆதாரந் தன்னைப்பார்த்து
உத்தமனே தானவனுய் நின்றுயானால்
தேறுத வாசியது தேருந்தேரும்
சிவபூத மைந்துதொழி லிருபத்தஞ்சே. (54)

அஞ்சான யிரஞ்சு பத்துகாடி
அப்பனே சொல்லுகிறே னறிவாய்க்கேளு
துஞ்சாத யிடைபின்னுஞ் சுழினையாகித்
தலங்குகின்ற காந்தாரி அத்தியோடு
மிஞ்சாத அசுவனியும் அலம்புருடன்முனும்
வேகமூள்ள குதமூடனே சிங்குவையும்பத்து
னெஞ்சார நின்றதொரு நாடிபத்தும்
நேர்மையுடன் பிரிதிவியின் வழிதான்பாரே. (55)

வழியான வாய்வினுட வழிதான்மைந்தா
மார்க்கமூடன் சொல்லுகிறேன் மனதாய்க்கேளு
மொழியான பிராணனுட னபாணன்முனும்
நிசமான உதானனெடு சமானன்மைந்தா
அழியாத வியானனெடு அஞ்சுமாச்சு
அரகரா வாய்வுடனே தேய்வுமாச்சு
சுழியாத தேயுவொடு வாய்வைக்கண்டால்
சுகமாகப் பூதவாயு வைத்தான்கேளே. (56)

கேளப்பா வியாழனெடு கூர்மன்மைந்தா
கிரிகாளுந் தேவதத்தன் தனஞ்செயனுமஞ்சு
ஆளப்பா ஐம்பூத வாயுவென்பார்
ஆச்சரியந் திசைவாய்வை யறிந்துகொண்டு
காளப்பா வாய்வுபத்துந் தெரிந்துநீயுங்
கருணையுடன் சிவயோகங் கருத்தில்நின்றால்
கோளப்பா ஒன்றுமில்லை யெல்லாஞ்சித்தி
குறிப்புடனே ஆகாச வழிதான் கேளே. (57)

கேளடா ஆகாச வழிதான்மைந்தா
கிருபையா யுரைக்கிறே னன்றாய்க்கேளு
சூழடா அர்த்தயே டனதாஞென்று
சுத்தமுடன் புத்திரயே டனதாஞென்று
வாழடா உலகயே டனதாஞென்று
வளமான ஆகாசவழியைக்கண்டு
ஆழடா அந்தரங்கச் சுழியில்நின்று
அப்பனே வாக்காதி யறிந்துபாரே. (58)

பாரப்பா வாக்காதி யென்னசொல்வேன்
பதிவான வசனமொடு கெவுனத்தானம்
நேரப்பா விசார்க்கமொடு ஆனந்தமஞ்சும்
நிசமான வசனாதி யென்றும்பேரு
காரப்பா வசனாதி யஞ்சுங்கண்டு
கருவான ஆதார மூலம்பார்த்து
சாரப்பா பிரகிருதி வழியேபார்க்கத்
தன்மையுடன் சொல்லுகிற சங்கைகேளே. (59)

கேளப்பா ராசதமுந் தாமசமுமைந்தா
கிருபையுடன் சாத்மீக குணங்கள்மூன்று
வாளப்பா மூக்குணங்க ளறிந்துகொண்டு
வரிசையுள்ள விந்துவுட வழியைக்கேளு
சூழப்பா பைசந்தி மத்திமைவைகரியும்
சூக்குமயம் நாலுமது வாக்கேயாகும்
ஆளப்பா வாக்காதி நாலும்பார்த்து
அரகரா ஆதாரந் தன்னைக்காணே. (60)

காணப்பா ஆதாரந் தன்னிலேதான்
கருவான உட்கருவி மூப்பத்தாறும்
பூணப்பா பிற்கருவி அறுபதாச்சு
புத்தியுட னுள்வெளியும் நன்றாய்ப்பார்த்தால்
தோணப்பா தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
தோணுமடா யிருதயத்திற் சூழ்ந்துபார்க்கில்
வீணப்பா ஒன்றுமில்லை தத்துவக்குப்பை
விளங்குபதி பசுபாச விளையாட்டாச்சே. (61)

ஆச்சப்பா உட்கருவி மூப்பத்தாறும்
அப்பனே சிவத்தினுட கூரேயாச்சு
நீச்சப்பா பிறக்கருவி யறுபதுந்தான்
நிசமான சத்தியுட கூரேயாச்சு
பேச்சப்பா உள்வெளியும் நன்றாய்ப்பார்த்துப்
பெருமையுட னுதார நிலையுங்கண்டு
காச்சப்பா கருவிகர ணாதியென்ற
கசடான தத்துவத்தைக் கண்டுதேரே. (62)

தேரப்பா சரியையொடு கிரியைரெண்டும்
சிவசிவா சத்தியுட கூறேயாச்சு
காரப்பா யோகமொடு ஞானம்ரெண்டு
கருவான சிவத்தினுட காலேயாச்சு
கோரப்பா சிவசத்தி அந்தங்கண்டு
நெறிமுறைமை தவறாம லந்தம்பார்த்து
க்காரப்பா சதாசிரி பொதிகைதன்னிற்
சங்கையுட னின்றுதவந் தாமேசெய்யே. (63)

அண்டக்களங்கு.

தாமென்ற அண்டத்தின் களங்குகேளு
தன்மையாய்ச் சிப்பியுட சதையைவாங்கி
வேமென்ற வெயிலிலிட்டுக் காயப்போட்டு
மிடுக்கான வெடியுப்பு நாலாங்காய்ச்சல்
பாமென்ற பலம்பத்து நிருத்துக்கொண்டு
பகர்கின்ற சிப்பியுட சதையும்பத்து
கோமென்ற ரெண்டையுந்தா னுரலிலிட்டு
நெகிடித்து எகுவினல் விடாமற்றூளே. (64)

தானென்ற அடைதட்டிச் சட்டிவைத்துச்
சாங்கமா யெரித்திடுவாய் சாமந்தானும்
பானென்ற பீங்கானிற் பனியில்வைக்கப்
பலபலெனச் செயநீராம் பண்பாய்வாங்கி
கானென்ற பீங்கானில் வைத்துக்கொண்டு
காரியமாய்ப் பூனீரு சீனம்ரெண்டும்
நானென்று பலம்நாலு கல்வத்திட்டு
நாட்டியரை மூன்றுநாள் ரவியிற்போடே. (65)

சிப்பிச் சுண்ணம்.

போடவே ஊமையாங் கிளிஞ்சிதன்னைப்
பூநீருங் கற்சுண்ணங் கரைத்துக்கொண்டு
தேடவே தெளிவிருத்து நாலாகாவில்
சிறக்கவே அதிலிட்டுச் சாமம்நாலு
ஏடவே யெரித்தெடுத்து ரவியிலிட்டு
ஏத்தமாம் பூநீரு வீரந்துத்தம்
ஆடவே தூரியது பலந்தானென்று
அரைப்புலந்தான் வகையொன்றுக் கரைத்திடாயே. (66)

அரைத்திடுவாய் வெடியுப்பு நீரிலுலே
அடைவாகச் சேருபோற் குழப்பிக்கொண்டு
பரைத்திடுவாய் கிளிஞ்சிபலம் பத்துதன்னில்
பாங்காகப் பிசரியே காயப்போடு
திரைத்திடுவா யெருவடுக்கி அதன்மேல்வைத்து
திறமான புடம்போட்டு முறத்தால்வீசு
உரைத்திடுவா யாறவிட்டு யெடுத்துக்கொண்டு
உற்றசட்டி தன்னில்வைத்து நீற்றிடாயே. (67)

நீற்றியே அகலிலிட்டு வில்லைவைத்து
நினைவாக மேலுமந்த நீரமுழ்த்தி
வீற்றியே மேல்மூடிச் சீலைசெய்து
மிடுக்காகப் புடம்போட்டு வில்லைவாங்கி
தேற்றியே செயநீரில் பொடித்துப்போட்டு
சேருபோற் குழப்பிப்பீங் கானிலிட்டு
போற்றியே புதுஅண்ட மதிற்பதித்து
பெருவெயிற் போடுயிரு பதுகாள்தானே. (68)

இருபதுகாள் போட்டிடவே மெழுகுமாகும்
இசைத்தசோர் காரமது பலமும்ரெண்டு
தருப்பதோர் சாரமது பலமும்ரெண்டு
தனியான வங்கத்தில் தோய்த்தெடுத்து
அருப்பதோர் அருசியது பலமும்ரெண்டு
சூட்டியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
அருப்பதோர் வெடியுப்பு நீராலாட்டி
ஐந்துகா லானபின்பு வில்லைகட்டே. (69)

கட்டியே உலரவிட்டு அகலிற்றனும்
காரணமாஞ் சிப்பிநீர் பொடியழுத்தி
விட்டியே வில்லைவைத்து மேலுமூடி
மிக்கான புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
தட்டியே முன்னண்டம் சமனுய்ச்சேர்த்துத்
தாக்கியரை மூன்றுகாள் மெழுகாய்ப்போகும்
புட்டியே பனியில்வைக்கச் செயநீராகும்
பீக்காலும் பாணிக்குவ் வாங்கிடாயே. (70)

வாங்கியே கெவுரியது பலந்தானென்று
மாட்டியே சுண்ணும்பு அமுரிதன்னில்
தேங்கியே குளம்பாகப் பண்ணிக்கொண்டு
சீலையிலே கட்டியே ஊரவைத்து
நீங்கியே மூன்றுநா ளானபின்பு
நினைவாக யிருநாளுக் தீயெரித்து
தாங்கியே யக்நீரிற் கழுவிக்கொண்டு
சமரசமாய்க் கல்வத்தி லிட்டிடாயே. (71)

இட்டுமே முன்சொன்ன நீரிலாட்டி
இசைத்துத்தான் மூன்றுநா ளானபின்பு
லிட்டுவா வில்லேதட்டி ரவியிற்போடு
மிகமூன்று நாட்காய்த்து குகையில்வைத்து
ஆட்டுமே அகலிலிட்டுச் சீலைசெய்து
ஐந்தெருவிற் லகுபுடமாய்ப் போட்டுவாங்கி
கீட்டுமே செயநீரி லரைத்துமைப்போல்
சீலைக்குள் தடவிஅண்டங் தன்னிற்போற்றே. (72)

போற்றியே அண்டமது புதிதாய்வாங்கிப்
பொத்திட்டு ரவிதனிலே காயப்போட்டு
மாற்றியே சட்டிக்குள் மணலையிட்டு
மருவவே பதித்துமே ரவியிற்போடு
ஏற்றியே யிருபதுநாள் காய்ந்தபின்பு
எடுத்திட்டால் மெழுகாகுங் கல்வத்திட்டு
சாற்றியே சாதிலிங்கம் வீரப்பொண்டும்
தகத்திட்டுக் கவசமெல்லாஞ் சீவிப்போடே. (73)

சீவியே கல்வத்திற் கூடப்போட்டு
செயநீரா லெட்டுநாளரைத்து மைப்போல்
மேவியே வில்லேதட்டி உலரப்போட்டு
மிக்கான நீருக்குள் வைத்துமூடி
காவியே குக்குடமாம் புடத்தைப்போடு
காசினியோர் மதிக்கஅண்டங் களங்கதாகும்
ஏவியே சுவலோகத்தொன்று யிந்தால்
எட்டாகும் யேமமது யிசைந்துகாணே: (74)

இசைந்துமே செயநீரில் மஞ்சிலைதன்னை
ஏடுத்துமே பலமொன்று கல்வத்திட்டு
முசைந்துமே முன்செயநீர் தனிலரைத்து
மூன்றுநா ளானபின்பு வில்லைதட்டி
தசைந்துமே முன்பொடியில் வைத்துமூடி
சந்துக்குச் சீலைசெய்து புடத்தைப்போடு
அசைந்துமே செயநீரி லரைத்துக்கொண்டு
ஆதியாங் கண்டர்மே லப்பிப்போடே. (75)

அப்பியே யேழுநாள் ரவியிற்போடு
அதன்பின்பு மூன்பொடியால் பூத்திவைத்து
சிப்பியே செப்பில்வைத்து மண்ணைச்செய்து
திரமான குக்குடமாய்ப் புடத்தைப்போடு
உப்பியே தருசியது குருவுமாகும்
உத்தமமாம் தருசுசுத்தி பண்ணிக்கொண்டு
துப்பியே சுத்தியது சொல்லக்கேளு
சுருக்கான வெடியுப்பு நீரிற்றானே. (76)

நீரிலே வெள்ளீயந் தன்னைத்தானும்
நிருத்துமே ஒன்றுபலந் தருசுக்குத்தான்
வாரிலே வராகனிடை சாணைதன்னில்
வண்மையா யுரைத்துமே கலக்கிக்கொண்டு
காரிலே தருசுதனைக் கல்வத்திட்டு
கலக்கியநீர் தனில்மூன்று நாளரைத்து
தேரிலே வில்லைகட்டி உலரப்போட்டு
சிறந்தமஞ்சி சீலைமேலே கவசங்கட்டே. (77)

கவசத்தைச் சிப்பிநீர் தன்னில்வைத்துக்
காரியமாய்ப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
புவசத்தை விடுவித்தாற் பொருமிநீரும்
புரம்பாக யெடுத்துவைத்துப் புகலக்கேளு
தவசத்தைத் தாளகமும் பலமுமொன்று
தாக்கியரை கல்வத்திற் சாரநீரால்
விவசத்தை வெங்காரம் பலமுங்கால்தான்
மிகச்சாணி தனிற்கழுவிக் கூடப்போடே. (78)

கூடவிட்டு வெடியுப்பு நீராலாட்டிக்
கூசாதே அஞ்சுநா ளரைத்துமைப்போல்
நீடவிட்டு வில்லேதட்டி உலரப்போட்டு
நிசமாக மூன்றுநாள் காய்ந்தபின்பு
தேடவிட்டுச் சிப்பிநீர்க் குள்ளமூத்தி
செப்பிலிட்டுச் சீலைசெய்து குக்குடந்தான்
பூடவிட்டுப் புடம்போட்டு ஆறவிட்டுப்
புட்டுமே கவசத்தை வில்லைவாங்கே. (79)

வில்லையிலே காற்பலந்தான் தூக்கிக்கொண்டு
விடுதுருசு குருவதிலே பலமுங்கால்தான்
நில்லையிலே நிமிளையது பலமும்ரெண்டு
நேகரைத்து ஒன்றுகச் சாரநீரில்
வில்லையிலே வெங்காரம் பலமுங்கால்தான்
வெடியுப்புச் செயநீரி லரைத்துமைப்போல்
கல்லையிலே கல்வத்திற் கூடவிட்டுக்
கலக்கரைப்பாய் நீராலே அஞ்சுநாளே. (80)

அஞ்சுநா ளாட்டியே வில்லைகட்டி
அடர்ந்தாவி தனிற்போட்டு மூன்றுநாள்தான்
தெஞ்சுநாள் சிப்பிநீர்க் குள்ளமுழ்த்திச்
சீலைசெய்து கெசபுடமாய்ப் போட்டெடுத்து
பஞ்சுநா ளஞ்சுபலங் கல்லுப்புத்தான்
பாங்காக வெடியுப்பு நீராலாட்டி
நஞ்சுநாள் நாகத்தைச் சுத்திபண்ணி
நாகத்தை லேசாகத் தகடுவாங்கே. (81)

தகடுநிரை சரியாக அரைத்துமைப்போல்
சமன்பாதி நிமிளைக்கல் லுப்புத்தானும்
அகடுகின்ற சரியாக நிறுத்துக்கொண்டு
அசையாமல் நாகத்திற் கவசங்கட்டி
தெகடுகின்ற சிப்பியாம் நீருபோட்டு
திட்டமாய்க் கல்லில்வைத்துச் சீலைசெய்து
மூகடுகின்ற அரையளவு குழியைவெட்டி
முடுக்கான கெசபுடமாய்ப் போட்டிடாயே. (82)

போட்டெடுத்த நாகத்தை உருக்கிப்பார்த்தால்
பொன்போலே கண்விட்டு ஆடும்பாரு
காட்டெடுத்த நாகத்தில் திருசுவீரம்
கலமான நிமிஷமது யெட்டுக்கொன்று
நீட்டெடுத்த சாரநீர் விட்டுஆட்டி
நிச்சயமாய் நாகத்தில் மேலேபூசி
தேட்டெடுத்த சிப்பிநீர்க் குள்ளேவைத்துச்
சீலைசெய்து கனபுடந்தான் போட்டிடாயே. (83)

கனபுடத்தில் நாகமது நீறுமாகும்
கடிசான நாகத்தின் நீறதொன்று
தினபுடத்திற் திருசுஒன்று சீனமொன்று
திரமான காரமொன்று கூட்டிக்கல்வம்
தனபுடத்திற் சாரநீர் விட்டுஆட்டித்
தாயான பரியுமரைப் பலந்தான்ரேக்கு
புனபுடத்திற் பூசியே காயவைத்துப்
பொரித்தெடுத்த அண்டத்தைத் தூளாய்ப்பண்ணே. (84)

தூள்ப்பண்ணிப் பரித்தகடு அமிழ்த்திச்சிட்டில்
சுகசீலைச் செய்தகன புடமாய்ப்போடு
ஆள்ப்பண்ணி ஆறவிட்டு யெடுத்துப்பார்த்து
அசையாமற் கவசத்தோ டொக்கப்போட்டு
தாள்ப்பண்ணிக் கல்வத்திற் பொடியாய்ச்செய்து
தாயான பரியிடைக்குச் சூதஞ்சேர்த்து
மூள்ப்பண்ணி முன்னீரா லரைத்துமைப்போல்
மூர்க்கமாய் வில்லைதட்டி ரவியிற்போடே. (85)

வில்லைதனைச் சிப்பிநீர்க் குள்ளமூத்தி
மிஞ்சாம லெருபுடமாய்ப் போட்டெடுத்து
கல்லதனைச் செப்புக்குள் ளெடுத்துவைத்துக்
காசிடைதா னுமிழ்நீரால் தான்குழைத்து
நில்லாதே புதுஅண்டம் மூன்றுவாங்கி
கோர்த்துருக்கி மேல்வைத்து அசையாமற்றான்
தில்லைதனைக் காசகலக் குழைத்ததைத்தான்
திலதமிட்டு ரவிதனிலே வைத்திடாயே. (86)

நிலதமிட்டு ரவிதனிலே தசநாட்போடு
செந்துரிக்கம் பீங்கானில் வைத்துக்கொள்ளு
விலதமிட்ட வெண்கருத்தான் வடிந்துபொங்கி
விழுகுமே பீங்கானி லெடுத்துக்கொள்ளு
சலதமிட்ட சரக்கெல்லாம் வெண்கருவாற்கட்டும்
சளம்பாமல் மஞ்சளது மெழுகுமாகும்
கலதமிட்ட நவலோகம் பத்துக்கொன்று
காட்டமா யெண்பது பத்துமாமே. (87)

பத்தான மெழுகெடுத்து உள்ளேகொள்ள
பணவிடைதான் நரைதிரையோ மாறிப்போகும்
சுத்தான சுக்கிலந்தான் கட்டித்தானும்
சூட்சமாய் மேலேறுங் கீழோடாது
நித்தான அனுபோகஞ் செய்திட்டாக்கால்
நிலைத்தான மதுகழன்று மேலேயேறும்
மூத்தான சுக்கிலந்தான் கட்டிப்போனால
மோட்சத்துக் கேறுகிற பாதையாச்சே. (88)

பாதையா மண்டோடு பலந்தான்பத்துப்
பருவிநின்ற கற்சுண்ணம் பலந்தானஞ்சு
பேதையாஞ் சிறுபிள்ளை மூத்திரத்தில்
பிசைந்துமே கரைத்துவைத்துத் தெளிவுவாங்கி
காதையா மண்டத்தைத் தூளாய்ச்செய்து
கருவாகத் தெளிந்ததைச் சட்டியிட்டு
ஆதையா மதிலிட்டு வற்றக்காய்ச்சி
ஆனபின்பு கிளியெடுத்து ரவியிற்போடே. (89)

ரவிமுன்னே போட்டெடுத்துக் கல்வத்திட்டு
நன்றுகச் சுத்தித்த'காரமஞ்சு
புவிமுன்னம் பொடியாக்கிச் சாரநீரால்
புகட்டியரை பனிரெண்டு சாமந்தானும்
கவிமுன்னே வீரமொரு காசுபோடு
கனமான தாளகமும் லிங்கம்போடு
சுவிமுன்னஞ் சூதமொரு காசுபோடு
கரிசியது ஐந்துகா சிடைதான்போடே. (90)

காசிடைதான் கெந்தியது கல்வத்திட்டுக்
கடிந்தரைப்பாய் மூன்றுநாள் சாரநீரில்
வீசிடைதான் வேறேவைத்து வேப்பம்வித்து
மிடுக்கான பேய்பீர்க்கு புரசம்வித்து
நேசிடவே நேர்வாளம் யெலியால்வித்து
நீக்கான பலமரைதான் கல்வத்திட்டு
கூசிடைதான் குன்றியுட சாற்றுலாட்டிக்
குழப்பிடுவா யுண்டையைத்து பண்ணிக்கொள்ளே. (91)

பண்ணியே மூன்மருந்து ஐந்துபங்கு
பாய்ச்சியரை யோர்பங்கு அண்டோடுள்ளே
பிண்ணியே மூன்மருந்து ஒன்றுகூட்டிப்
பிசைந்திட்டுக் குகையிலிட்டுச் சீலைசெய்து
குண்ணியே குகைமண்ணுற் சில்லுப்போட்டுக்
கூசாதே ஊதிடுவா யிரண்டுசாமம்
அண்ணியே யாறவிட்டு உடைத்துவாங்கி
அரைத்து நன்றாய் மூன்மருந்து பிசரிஊதே. (92)

ஊதியே சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
உதட்டியிப் படிஐந்து தாமேலூது
சாதியாய்ச் சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
தகத்துமே கல்வத்திற் கல்லுப்புத்தான்
பாதியாம் பழச்சாற்றால் நேகரைத்துப்
பண்ணியே குளிசட்டி வாய்தான்விட்டு
சூதியே துட்டகலஞ் சத்துவைத்துத்
துப்பரவாய் வங்கமென்ற நாளத்தூதே. (93)

ஊதியே கசடகற்றி உருக்கிக்கொண்டு
உத்தமமாம் வாழையுட கிழங்குச்சாற்றில்
நீதியா யைந்துதரம் சாய்த்தெடுத்து
நிச்சயமாய்த் தங்கமது நாலுக்கொன்று
கேதியாய்க் கூடவிட்டு உருக்கிக்கொண்டு
கெட்டியாய் மெழுகுகட்டிக் கிண்ணிவாரு
ஆதியே அடித்தூரில் கெட்டிச்சீலை
அடர்த்தியாய்ச் செய்துமே வைத்துக்கொள்ளே. (94)

வைத்திட்ட கிண்ணிவா யுகையில்வைத்து
வாகாகச் சுத்தித்த சூதம்விட்டு
கைத்திட்ட கரூமத்தஞ் சாறுதன்னில்
கலங்காதே தெளிவிருத்துச் சுருக்குப்போடு
நைத்திட்ட நாற்சாமஞ் சுருக்குப்போடு
நலமாக வெண்ணெய்யாம் வளித்துவாங்கு
அய்த்திட்ட குளிர்ந்ததண் ணீரிற்போடு
ஆரையிலைக் குள்வைத்துப் புடத்தைப்போடே. (95)

புடம்போட்டு ஆரையிலைக் குள்ளேபத்து
புரூயிலையி லரைத்துமே புடந்தான்பத்து
உடன்போட்டுச் சூடன்தீ தன்னில்வாட்டி
உறமாக யெண்ணெய்குத்தி உருக்கிக்கொண்டு
அடம்போடு அயங்களஞ்சி சூதந்தன்னில்
அசையாமல் மணியுருக்கி நூற்றெட்டாக
திடம்போடு செம்பட்டிற் கோர்த்துக்கொண்டு
செபம்பண்ணு பஞ்சதேவாட் சரத்தைத்தானே. (96)

பஞ்சதே வாட்சரத்தை மவுனமாகப்
பரமாக ஒருசுத்துச் செவிப்பாயாகில்
வஞ்சமில்லா வாசியோ டித்திரும்பி
மாற்றூனுன் மூன்வந்து மகிழ்ச்சியாலே
தஞ்சமில்லா தனதடியிற் பணியேசெய்வான்
தாயான உன்மணியாஞ் சத்திதானும்
அஞ்சியே கேட்டதெல்லா மப்பாவீவாள்
அளிம்பான மனதானு லகல்வாள்பாரே. (97)


பாரென்ற மணிதனக்கு காலிலொன்று
பரிவிட்டுக் கெந்தியிட்டுச் செந்தூரித்து
சீரென்ற பணவிடைதான் பாலிலுண்ணு
செங்கதிருக் கொப்பாகுந் தேகத்தானும்
பேரென்ற பிரமனுட யெழுத்தும் பொய்யாம்
போட்டிடவே நவலோகம் நூற்றுக்கொன்று
பாரென்ற பத்தரையே மாத்துக்காணும்
பரியிட்டார் செம்பாகும் பரிந்துபாரே. (98)

பார்க்கவே உருச்செபித்துப் புருவமீதிற்
பண்பான மனக்கண்ணுல் நன்முய்ப்பார்த்தால்
மார்க்கமுள்ள லெட்சுமியும் விஷ்ணுதேவர்
மகத்தான பூரணசந் திரன்போல்மைந்தா
ஏர்க்கையுட னிருதயத்திற் தோணும்பாரு
இன்பமுள்ள தெரிசனத்தைக் கண்டாயானுல்
தீர்க்கமுள்ள சிவயோக வாழ்வுபெற்றுச்
செல்வபதி யாயிருப்பாய் தினமும்நோக்கே. (99)

நோக்குவது பூரணசந் திரனேநோக்கி
துண்மையுடன் பூரணமாய் நின்முயானுல்
நாக்குநுனி யந்தமதில் வாசிநின்று
நடுங்காமல் தீபமதில் நாடும்பாரு
வாக்குமன தொன்முகி மூன்முங்காண்டம்
வங்கனமே கனபதுசு வாழ்வுமுண்டாம்
தூக்கமென்ற கொடுமைதனே யகற்றிமைந்தா
சோதியா மிடமறிந்து சுகத்தில்நில்லே. (100)

உரோமரிஷி பரிபாஷை

மூன்முங்காண்டம் 100 முற்றிற்று



உ

பரமபதி துணை.

உரோமரிஷி

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை

4-வது காண்டம் 100.

காப்பு.

சதுரமாங் காண்டத்தை செப்புதற்குச்
சதாசிவனுர் பாதமென்றன் சிரசில்வைத்து
நிதரமாம் சிவனுடைய உத்தாரத்தால்
நித்தியராம் குருபுசுண்டர் பாதம்போற்றி
மூதரமாம் ஞானத்தின் சமாதிகாப்பு
மூச்சுடரா மணிமுடிக்கும் பரமேகாப்பு
கதரமா மணித்தாயார் பாதங்காப்பு
கடந்துநின்ற மனேன்மணித்தாய் பாதங்காப்பே. (1)

மனேன்மணித்தாய் பாதமது பணிந்துபோற்றி
மார்க்கமுட னிருவினையும் நீக்கச்சொன்னேன்
இனேன்மணியாள் பிறப்பிறப்பு ரெண்டினுலே
ஏற்றமாய் வலிவிசிரி பெண்பொன்காட்டி
பினேமணியாய் வறுமைரெண்டாய்ப் பெண்ணுண்ரெண்டாய்ப்
பேரின்பஞ் சிற்றின்பம் பேரும்ரெண்டாய்
தினேன்மணியாஞ் சீவசொரூ செயலுமாகிச்
செயலற்ற யெழுவகையின் தொர்தர்தானே. (2)

தொந்தமா யுனையறிந்தாற் பிறவிபோச்சு
தொடுசான சிற்றின்பர் துலைந்துபோச்சு
சந்ததமாய் நிலையறிந்து பூரணப்பாலுண்டு
சச்சிதா னந்தவெள்ளந் தன்னில்மூழ்கி
பெந்தமாய் நின்றநிலை பிறவிமாற்றிப்
பெருமையாம் பூரணத்தி லுயரவேற்றி
தந்தமாய்த் தடங்காட்டித் தமரினுள்ளே
தாயான மனோன்மணியைத் தனித்துப்போற்றே. (3)

மணியற்றூல் தெகூஷணன்றூள் போற்றவேண்டாம்
மவுனமுற்றூல் போற்றூயே வகையாய்ப்பூசி
பிணியைத்தா னற்றுவது யெங்கேயென்றூல்
பூரணத்தி லிருந்துமே யிளப்பையாற்று
தினியத்தா லொன்றுமில்லை யெல்லாம்போச்சு
சினம்போச்சு மனம்போச்சு தியக்கம்போச்சு
குணியத்தா னறுதலம் வெளியாய்ப்போச்சு
குறித்துநின்ற ஒன்றுக்குள் கூடலாச்சே. (4)

கூடவே ரெண்டோடு ஐந்துமாச்சு
குவித்துமே யெட்டாச்சு பணிரெண்டாச்சு
பாடவே பழங்கதைபோற் கோடியாச்சு
பலகலையாம் பலநினைவாய்ப் பரம்புமாச்சு
மூடவே மூன்றுகி மேருவாகி
மூடியதோர் கொடுமுடியாம் பாறையாகி
தாடவே குண்டாகிச் சராசரங்களாகிச்
சதாகோடி சீவரெல்லா மூரைத்தவாரே. (5)

உரைத்ததொரு சராசரங்கள் சீவராசி
உற்றபத புவனமொடு அண்டமெல்லாம்
புரைக்கிறேன் பூரணத்திற் பிறந்ததாகும்
பிறந்தவித மேதென்றூற் பகரக்கேளு
விரைக்கிறேன் யெழுவகையின் யோனிகாலு
மிக்கான விந்துவதாய் விளங்கும்போதம்
தரைக்கிறேன் மேகசலங் கடல்நீர்போலக்
கலந்துநின்றசகமெலாம் போதமாச்சே. (6)

ஆச்சுதே போதமெங்கும் நிறைந்ததென்றால்
அகண்டத்திற் சொன்னவகை போக்கங்கேது
நாச்சுதே நாதத்தில் ஒன்றிநிற்கும்
கல்வினையுந் தீவினையும் போச்சுபோச்சு
பாச்சவே பெண்ணோடே கூடியாடிப்
பயன்பெறுப் பேய்களுக்குப் பிறப்புண்டாகும்
வாச்சுதே வாருதியிற் சலத்தைமேகம்
வாங்கியே யிரைத்ததுபோற் பிறப்புண்டாச்சே. (7)

பிறப்பதுவு மூண்டாகி மாண்டுதானால்
பூரணத்திற் றானுகிப் பின்புமீளும்
இறப்பதுவு மில்லையவர் கற்பங்கொண்டால்
எந்நாளுங் காயசித்தி யாகவாழ்வார்
மறப்பதுவும் வண்டதுதான் மதுவையுண்டு
மயங்கியது பிறந்தாப்போற் சென்னமார்க்கம்
பறப்பதுவு மதுவையுண்டு சென்பகத்துள்
பத்திநின்று சென்னமாய் நாற்சாணுச்சே. (8)

சானென்ற கருவிகளி னாலேயல்லோ
சராசரங்க ளண்டமெல்லாம் பரவிநின்று
நானென்ற வாய்ப்பேச்சாம் ஞானிதன்னை
நாக்கறுத்து வாய்கிழித்து மண்ணைப்போடு
ஊனென்ற உலகோர்க்கு உபதேசம்பண்ணி
ஊமையிது தானென்று கெடுத்துவிட்டான்
பேனென்ற பெண்பொன்னு மண்ணிலேதான்
பிறந்ததப்பா சண்டாளத் தொய்தந்தானே. (9)

சண்டாளா பலநூலைப் பார்த்துப்பார்த்து
சத்திவே தாந்தசித் தாந்தமென்று
கெண்டாளா மனதுண்ணிப் பாராமற்றான்
கெட்டலைந்து உருண்டார்கள் கோடாகோடி
அண்டாளா விடமெங்கே அறிவதெங்கே
அசையாத மவுனமெங்கே ஞானமெங்கே
கொண்டாளா நின்றமேற் றுரியமெங்கே
கொடுமையிலா சூட்சத்தில் ஞானமாமே. (10)

ஞானமாம் வாசனையாந் தொய்தத்தோடு
நாடாமல் நின்றுக்கால் ஞானமேது
மோனமா மரையேது அத்தமேது
மூரிநின்ற வெளியேது சோதியேது
தானமாந் துரையேது சூட்சமேது
சூட்டியிக்த விபரமெல்லா முப்பாம்பாரு
தானமா மல்லவென்று சம்சாரத்துள்ளே
தள்ளுமப்பா தொய்தத்தி ணுண்மைதானே. (11)

சாதகம்.

ஆண்மையாந் குருவான அகண்டமூர்த்தி
ஆண்மையாம் வாதமென்ற அருளிதாச்சு
தாண்மையா யேறுதற்கு சாதகத்தைக்கேளு
சமரசமாம் லெட்சயத்தை விளங்கச்சொல்லும்
நின்மையாம் நிலைதோறு மொழத்தைச்சொல்வேன்
நிலைத்துநின்ற பிராணுய நிலைமைசொல்வேன்
கண்மையாம் நடனமென்ற நிர்த்தஞ்சொல்வேன்
கலம்பெரிய லெட்சயத்தை கல்குவேனே. (12)

கல்குமென்று உரைத்தமொழி ஞானிகேளும்
நன்றுகச் சொல்லுகிறே னுட்டங்கேளு
பல்குமென்ற மூலத்தில் வாசிவைத்துப்
பலகாலும் பிராணுயம் பண்ணித்தீரு
அல்குமென்ற குண்டலிக்குள் நடனங்கண்டு
ஆதித்தன் கோடியைப்போற் காந்திகாணும்
மல்குமென்ற கண்டத்தில் அங்கென்றாணு
வாய்திறக்க வொட்டாது வழிசெய்வாரே. (13)

செவ்வையாய் நின்றுரைத்துப் பழக்கமாஞல்
சீரான மனேன்மணிதான் புருவநிற்பாள்
உவ்வையா மவுனத்தை ஒட்டியூதி
உயரவே சாம்பவியைக் கண்டுகொள்வாய்
கெவ்வையா யிவ்வளவும் யோகமார்க்கம்
நின்றவரூர் சிவயோகி நிலைத்துஉண்ணு
குவ்வையாய் விந்துவென்ற குருபதத்திற்
கூடவே மவுனத்தின் தாரையாமே. (14)

காரையாம் விந்துவிலே ரவிமதியோர்கோடி
தளுக்காகக் கண்கூசி மயக்கமாகும்
ஓரையாம் நாதத்தில் செவிடுபட்டு
ஊமையென்ற யெழுத்தினுட உருவே தோற்றும்
வாரையாம் சத்தியிலே வன்னியோடும்
மதிகோடி ரவிகோடி ஒவ்வாஒவ்வா
காரையாம் வர்மப்பா லுண்டவர்க்குக்காணும்
கலிவான ஞானிக்கு மாயந்தானே. (15)

மாயமாம் சிவத்துக்குள் மவனஞ்சென்றால்
மதிகோடி வன்னிரவி சோமன்கோடி
ஆயமா மம்பரத்தின் மூப்பாலுண்டு
அகாரமொன்று உகாரமொன்று அறிகுவாய்நீ
தாயமா மகாரமொன்று மூப்பாழாகத்
தங்கித்து அதிஞெளியைச் சொல்லப்போமோ
தேயமா மொளியுடைய உன்மனந்தை
தேவிபத மென்றகே சரிதான்காணே. (16)

கேசரியின் தாயான காந்திகாணும்
கெடியான விண்கொள்ளாக் கரையுங்கொள்ளா
பாசரியின் பரனென்பார் அம்பரந்தானென்பார்
பாரிதற்குள் மவனமூண்டு அறிவுகொண்டு
ஊசரியின் மவனத்தே நிஷ்களமேயாவாய்
உயர்கின்ற அம்பரத்தி லேதாயேதோ
நேசரியா யிப்படித்தான் லெட்சயத்தினேர்ஷை
நேரறிந்து அப்புறத்தே சோதிதானே. (17)

தானென்ற பராபரத்தி லாறுவரையுண்டு
சமரசமாய்க் கேட்டிரும்போம் சொக்கிக்காணும்
மூனென்ற மூலகுரு பிள்ளைதானும்
மூர்க்கமாய் காலாங்கி நாதர்தாமும்
வானென்ற மேருவெல்லாம் பொன்னேயாக்கி
மகத்தான அட்டமா சித்துமாடி
வேனென்ற மூப்பூவை மூடித்துக்கொண்ட
மிக்கான ரசவாதப் பேருள்ளாரே. (18)

ரசவாதப் பொருளாகக் குளிகையிட்டு
ஈடியே பூரணத்தி லஞ்சுவரை கண்டார்
பிசகாத உலகத்தே அவரைப்போல
பெருமையாஞ் சித்தருக்குக் கீர்த்திவைத்தார்
நிசவாத ரிஷிகளொடு முனிவர் சித்தர்
நோகச் சமாதியிலே யிருந்துமீண்டார்
தசவாத செடத்தோடே சேர்ந்தோரில்லை
சமத்தான மனதினுட சத்திதானே. (19)

மனதினுட வாசனையாங் குரங்குகேளு
மாட்டியல்லோ இந்திரியக் கொப்புக்குள்ளே
தனசினுட னடித்தடித்துப் பேய்க்கூத்தாகித்
தளர்ச்சியாய் மனதையல்லோ சலனம்பண்ணி
முனசினுட முத்திக்கு மேறெட்டாமல்
மூழுமோசச் சனியனென்ற மனதுதானும்
அனசினுட வாசனையை யடித்துத்தள்ளில்
அந்தகர்க்கும் ஞானவழி அணுகுங்காணே. (20)

அணுகவே யெப்படித்தா னென்றுற்கேளு
அகலுதற்குக் குரங்கைவிட்டு வழியேசெல்லு
கணுகவே உலகத்தில் வாதம்வந்தால்
நன்மையாய் வழிதனையே ஈடிச்செல்வார்
தணுகவே சாதுசங்க வேதாந்தம்பார்த்தால்
சமரசமாய் வாசனையாங் குரங்குபோகும்
இணுகவே அந்தரவா சியிலேயேற்றும்
எத்தனையோ உலகத்திற் பாடினாரே. (21)

பாடியே ஒருவருடன் வாய்பேசாதே
பரந்தனிலே ஆங்காரந் தனையெண்ணாதே
நேடியே ஒருவருக்கு மிடங்கொடாதே
நேர்மையாய் நடந்துகொள்ளு பொய் சொல்லாதே
ஏடியே ஒருவர் சொன்ன லேங்கிடாதே
எத்தனைதான் சொன்னலும் குற்றம் வேண்டாம்
தடியான வார்த்தை சொல்லுஞ் சத்திராதிக்கிச்
சாங்கமா யேழையைப்போற் றிரிந்திடாயே. (22)

திரிந்திட்டார் மகாரவரை நாதஓசைச்
சேயர்க்குப் பீடமது மவுனஞானம்
உரிந்திட்டு ஊணிப்பார் நாதத்தோடு
ஒருமூனேயா யொருவழியா யொன்றுயோடும்
அரிந்திட்டு தோற்றுவது அங்கொன்றில்லே
அகண்டவெளி சவிகோடி சூழவன்றி
கரிந்திட்ட மதிகோடி கண்கொள்ளாது
காரணமாங் காரமென்ற மகாரங்காணே. (23)

காணவே மகாரமல்லோ ஆசானுலே
காட்டுகின்ற முறையிதுதான் ஞானயோகம்
ஆணவே மகாரமது நாதந்தாண்டி
அடங்கிநின்ற இடமல்லோ கேசரிதானுகும்
மாணவே மாலெழுத்து யென்றுசொல்வார்
மாற்றுவது மூன்றெழுத்து யென்றுகாணர்
தோணவே மகாரவித்தை அதீதவித்தை
துஷ்டருடன் சொல்லாதே மவுனமாமே. (24)

அண்டக்குரு.

மவுன அண்டக் குருவதனைச் சொல்லக்கேளு
மறுப்படாக் கம்பியுப்பு பலமீரெட்டு
அவுனமென்ற அடிகனத்த சட்டியிட்டு
அடுப்பேற்றி யெரியவிட்டு உருகும்போது
தவனமென்ற பிராந்தியுடன் சாராயமிட்டுத்
தாக்காக யெரியையிலே அண்டமொன்று
உவனமென்று உருகையிலே ஒன்றுபோடு
உட்கொண்டு வாங்கியபின் யினிமேற்கேளே. (25)

அதுமேலே சூடன்றுன் இடைவராகன்
அருகாகுந் தீபத்திற் கொளுத்திப்போடு
பதுமேலே யெரிந்தல்லோ அடங்கிப்போன
பக்குவத்தி லண்டமொன்று பரிந்துபோடு
இதுமேலே சாராயம் விட்டுப்பின்பு
எரியையிலே சூடனைக்கொளுத்திப்போடு
கதிந்துமே உருகையிலே அண்டமொன்று
கதித்துள்ளே வாங்கிச்சா ராயந்தானே. (26)

சாராயம் விட்டபின்பு சூடன்தன்னைத்
தரித்துமே காசிடைதான் கொளுத்திப்போடு
பாராய மிப்படித்தான் பதினுருகப்
பக்குவத்தான் பண்ணியபின் பனியில் வைப்பாய்
தோராயஞ் செயநீராஞ் செயநீர்க்குள்ளே
துவைத்துமே வாட்டினுல் சுருக்கிறகட்டும்
ஆராய அறுபத்து நாலுங்கட்டும்
அணுகினுல் சுவலோகம் யேமமாமே. (27)

ஏமமாம் செயநீரிற் சொல்லக்கேளு
இணங்கன்தான் காசொன்று சூதமொன்று
தர்மமாஞ் சாரமொன்று தாளகர்தானொன்று
தாக்கான காரமொன்று கல்வத்திட்டு
காமமாம் செயநீரை விட்டுஆட்டிக்
கனமாக அரைத்துநன்று யைக்துகாள்தான்
பூமமாம் புதுஅண்டத் தன்னின்மேலே
போட்டிடுவாய் சுவசமது கட்டிடாயே. (28)

சுவசமாய்க் கட்டியே ரவியிற்போடு
கணக்காகப் பத்துநாளானபின்பு
அவசமா யோடுதனில் மண்ணைப்போட்டு
அதற்குள் வைத்துப் பிரட்டிடுவாய் சாமத்தானும்
புவசமாய்ப் பூநீராம் பூவை வாங்கிப்
புளிப்பான பனங்கள்ளுக் காடியாலே
பவசமாய்ப் பலமொன்று அரைத்து அப்பிப்
பாங்கான சீலைசெய்து காயவையே. (29)

காயவைத்துத் தருத்திக்குள் வைத்துமெள்ளக்
கனமாக ஊதியொரு நாழிதானும்
ஆயவைத்து மண்ணீக்கிக் சுவசந்தள்ளி
அண்டத்தைப் பார்த்தவுடன் கூகைநீராம்
பாயவைத்துத் தருசியதில் வாய்நீரார்பூசி
பக்ஷத்தில் தருசியது நீருமாகும்
தோயவைத்த தயிர்போலே சூதங்கட்டும்
சொல்லரிது அண்டத்தின் ஆட்டுத்தானே. (30)

அண்டத்தின் நீருக்குள் சாரந்தனனே
அழுந்தவே நடுவைத்து அழுத்திநன்றாய்
பண்டத்தி னகலிலிட்டுப் பதியமூடிப்
பாங்காகச் சீலைசெய்து புடத்தைப்போடு
கண்டத்தின் கரியினுட தந்தம்போலரம்
கரியினின்று உருகியே மணிபோலாடும்
விண்டத்தின் மகிமைசொல எண்ணற்கூடா
வேதாந்தி கருணையுட மேன்மையாமே. (31)

அண்ட மெழுகு.

மேன்மையா மண்டத்தின் மெழுகுகேளு
வெடியுப்பு பலமொன்று சாரமொன்று
தான்மையாந் தாளகமும் பலந்தானொன்று
சதுரமாம் வெங்காரம் பலமுமொன்று
பான்மையாம் பூநீரு பலமுமொன்று
பகரிய சீனமது பலமுமொன்று
கான்மையாம் சவ்வீரம் பலமுமொன்று
கடிந்துரைப்பாய் சவுக்கார நீரிலுலே. (32)

சவுக்கார நீரு.

சவுக்கார நீரதுவும் சொல்லக்கேளு
தளுக்கான பரங்கிவைப்புச் சவுக்காரந்தான்
பவுக்காரம் பலம்பத்து வெடியுப்புப்பத்து
பாங்கான சீனம்ரெண் டரைப்பலந்தான்
நவக்கார நமச்சாரம் பலமென்றேகால்
நாட்டிலே கல்லுரலி லிடிப்பாய்நய்ய
அவுக்கார அஞ்சுநாள் தொருங்கிடித்து
அடிகனத்த சட்டியில்வைத் தெரித்திடாயே. (33)

எரியவே சுழன்றுபொங்கிச் சுண்ணமாகும்
எடுத்திட்டுப் பனியில்வைக்கச் செயநீராகும்
அரியவே இந்நீர்தான் ஆண்மைமெத்த
அறுபத்து நாலான பாசாணங்கள்
கரியவே சுருக்கிட்டுப் பார்த்தாயானால்
கரியில்நின்று கட்டியே ஆடும்பாரு
பரியவே யின்னீரி லெல்லாங்கட்டும்
பாங்காக அஞ்சுநா ளரைத்திடாயே. (34)

அரைத்துமே மூன்மருந்தை ஐந்துநாள்தான்
அகலமாய் வில்லேபண்ணி ரவியிற்போட்டு
விரைத்துமே காய்ந்தபின்பு சிப்பிநீற்றில்
விருத்தமாய் நடுவைத்து மேலுமூடி
மரைத்துமே மண்செய்து குக்குடமாம்புடத்தில்
மறவாதே போட்டுமே யெடுத்துக்கொண்டு
தரைத்துமே சவுக்கார நீரிலாட்டிச்
சாங்கமா யண்டமது தண்ணீர்பூசே. (35)

பூசியே சீலையிலே இளிபோற்கட்டிப்
புதிதான அண்டமது பத்திற்பூசி
தேசியே செந்துருக்கம் மேலேவைத்து
சிறந்தாவி தன்னிலே பட்சம்போடு
மாசியே மணலில்வைத்துப் பிரட்டிவாங்கி
மார்க்கமாய்க் குக்குடத்தைப் புடத்தைப்போடு
பேசியே யெடுத்துப்பார் மெழுகுமாகும்
பெருமெழுகிற் தங்கவெண்ணெய் சேர்த்திடாயே. (36)

சேர்த்துமே நவலோகத் தீந்தாயாலும்
சிவந்துதா னிருக்குமே யேமந்தானும்
மாத்துமே அறுபதுக்கு மேலேயாகும்
மண்ணோடு கல்முதலாய்ப் பழுக்கும்பாரு
தாத்துமே வாசனைக்குச் சூதங்கட்டும்
சாரந்தான் வாட்டினாற் சிவந்துபோகும்
ஏத்துமே நொடியிற்குள் யேறலாகும்
ஏகலா மேகவெளி தன்னிற்றானே. (37)

தானன கள்ளென்ற காடிதானும்
சாராயம் படியொன்று சட்டியிட்டு
வேனன வெடியுப்பும் பலமைந்திட்டு
வெருங்கள்ளு தனிற்கரைத்துக் கொண்டுதானும்
ஆனன யிவ்வகையை யெளிதில்யார்க்கும்
அன்புடனே சொல்லாதே அருமையோடு
நானன நாலாநாள் கொதிக்கவைத்து
நலமான நுரையெழும்பும் ஒன்றில்வாங்கே. (38)

எழும்பியதோர் துரையெல்லாம் ஒன்றில்வாங்கி
இருத்துமே தெளிவதுவும் கூடவிட்டு
அழும்பியதோ ரண்டமது அஞ்சுதானும்
அதற்குள்ளிட்டு அஞ்சுநாள் மூடிவைத்து
தழும்பியதோ ரண்டமதைக் கடுவெளியிற்போடு
சாங்கமாய் பத்தாநா ளடுப்பில்வைத்து
நழும்பியதோ நிருநாழி தானெரித்து
நாட்டடா யண்டத்தை யெடுத்திடாயே. (39)

எடுத்திட்ட அண்டத்தைக் கல்வத்திட்டு
ஏற்றமாம் சவ்வீரம் வராகனென்று
தடுத்திட்ட சாதிலிங்கம் வராகனென்று
தாளகம னேசிலையுங் கெந்திசூதம்
மடுத்திட்ட துருசியொடு வகைவகைக்கு
வராகனிடை நிருத்துமே கூடவிட்டு
படுத்திட்ட சவுக்கார நீரினூலே
பாய்ச்சியரை யஞ்சுநாள் பண்பாய்த்தானே. (40)

பண்பாக வில்லைதட்டிக் காயப்போடு
பருவண்டம் பொரித்தெடுத்த ஓடுதன்னை
தண்பாகச் சவுடுகற் சுண்ணந்தானும்
சட்டியிலே கரைத்திருத்தித் தெளிவைவாங்கி
அன்பாக அண்டோட்டை யதற்குள்போட்டு
அதற்குள்ளே சீனமொன்று வீரமொன்று
வன்பாகப் பொடிபண்ணிக் கூடப்போட்டு
வருத்தாப்போல் வாங்கியே யரைத்திடாயே. (41)

அரைத்துமே பழச்சாற்றுல் வில்லைகட்டி
அந்தரவி பட்டிடவே காயப்போடு
துரைத்துமே துருத்தியிட்டு உலையிலூது
சுப்பிரமாம் வெள்ளையா யெடுத்துக்கொண்டு
மூரைத்துமே முன்வில்லை தனக்குத்தானும்
மூனித்துமே அகலிலிட்டுக் கீழ்மேலாக
புரைத்துகடு வில்லைவைத்து வில்லைதன்னைப்
பொருந்தவே மண்செய்து புடத்தைப்போடே. (42)

புடமதுதான் குக்குடமாம் புடத்தைப்போடு
பின்புதா னெடுத்துமே பொடியைநீக்கி
திடமதுதான் நவலோகத் தீய்த்தாயானால்
திட்டமாய் ஐந்நூற்றுக் கொன்றுதானும்
நடமதுதான் பத்தரையே மாற்றுமாகும்
நயக்கதோர் சூதமது கட்டிப்போகும்
விடமதுதா னுண்டசிவ னுட்டைப்போலே
வெகுவித்தை யுண்டதிலே விளம்புவேனே. (43)

விளம்பியே ஒருவரிடம் பேசிடாதே
மேதினியார் புத்திகெட்ட மாடேயாகும்
அளம்பியே வெகுவீணர் மெத்தவுண்டு
அவருடனே வாதவித்தை பேசிடாதே
தளம்பியே யழுதுகொண்டு தாயார்பாதம்
சதாசித்த மறிவோடே மனதிலுன்னி
இளம்பியே யேழையைப்போ லிருந்துகொண்டு
ஏகமன மாகியேநீ சமாதியுக்கே. (44)

சமாதி விபரம்.

சமாதியாம் சவ்விகற்ப சமாதிகேளு
தனித்திடுதல் ரெண்டுவகை யதிலேயுண்டு
தமாதியாஞ் சத்தானு வித்தையொன்று
தரிப்பான நிரவிவித்தை சமாதியொன்று
புமாதியாஞ் சத்தானு வித்தைமார்க்கம்
புதியதொரு கைவல்ய சமாதிக்குத்தான்
பமாதியாஞ் சத்தங்கள் சாட்சிஒசைப்
படுகிறது உன்மனத்தைப் பருவங்கேளே. (45)

பருவமருஞ் சத்தானு வித்தையொன்று
படியான சவ்விகற்ப மென்றுபேரு
தருவமாந் திரிசானு வித்தைமார்க்கம்
சூட்சமா யந்தநிலைக் குள்ளேபுக்கி
சருவமாந் தன்னே அனு சந்தானம்பண்ணிச்
சஞ்சரிக்கிற் நிரியானு வித்தையாகும்
மருவமாம் சவ்விகற்ப சமாதியாகும்
மருவியதோர் சஞ்சாரத் திருக்கிற்பாரே. (46)

பாரேநீ நிருவிகற்ப சமாதிகேளு
பாங்கான தத்வலய சமாதி முத்தி
தாரேநீ சத்தானு வித்தைமுத்தி
தீனமறந்து தூக்கமது மயக்கம்போலே
வாரேநீ பிறர்சத்தங் காதிற்கேளா
மருவியந்தப் பூரணத்தே லகித்துச் சித்தம்
நீரேநீ சைதன்ய மாகிப்போலுல்
நிருவிகற்ப சமாதியென்ற நேர்மையாச்சே. (47)

நேர்மையாஞ் சமாதிவிட்டுச் சஞ்சரிக்கும்போதும்
நினைவாகச் சமாதியிலே யிருக்கும்போதும்
சீர்மையாங் காலமென்ற திரையத்துள்ளும்
சிதைந்தபிர பஞ்சமெல்லாம் பொய்யதென்று
வேர்மையாம் விபகாரத் தாலேதோன்றி
விரிந்தபிர பஞ்சத்தின் பாசந்தள்ளி
நேர்மையாம் நிருவிகற்ப சமாதிநின்றால்
நெளிவான நிருவிகற்ப சமாதியாச்சே. (48)

ஆச்சென்ற தத்வலய சமாதிமுத்தி
அறிவான நிருவிகற்ப மாகும்போது
நீச்சென்ற நிருவிகற்ப சமாதிக்குள்ளே
நேரான விக்கினங்கள் நாலதுண்டு
தோச்சென்ற தெதுவென்றுற் சொல்லக்கேளு
சூழ்ந்தலயம் விட்சேப மாகும்பாரு
காச்சென்ற ராசதமாஞ் சுவாகமென்றும்
கருத்தூணிச் சொல்லுவது நாலுதானே. (49)

நாலென்ற நிதற்குள்ளே லயத்தைக்கேளு
தனித்துநின்ற நித்திரைதான் விட்சேபந்தான்
காலென்ற ராகமூருங் கலக்கத்தாலே
கலந்துவரும் வாசனையுங் கரணத்தாலே
மானென்ற மனோசி யத்திலுலே
வருகுந்தன் சங்கற்பம் நித்திரையுமல்ல
ஆனென்ற மனோசி யமுமல்ல
அறிவான சொரூபமது மறந்துபோமோ. (50)

போமென்ற தேவதைகள் வந்தாலுந்தான்
புகழ்ந்துசட்டை பண்ணுதே யகண்டமாகில்
ஆமென்ற அத்துவித நெறியிற்கூடு
அறிந்துமே சஞ்சார சமாதிக்குள்ளே
தேமேரீ திடப்பட்ட பின்பு கேளு
தெளிந்துமே சகலசமூ சயமும்போக்கி
ஆமேரீ சுட்டசட்டி விட்டாற்போலத்
தொந்தமாந் தேவதையை அசத்தாய்க் காணே. (41)

காணவே தேவதையை மனதிலெண்ணிக்
கலங்காமல் மலைபோலே அசைவுமற்று
நினைவாகக் காத்துப்போற் தேவைகளென்று
நிச்சயித்து ஒன்றாக நில்லுநில்லு
ஆணவே ஐந்துவித நிலைதாமென்று
அறிவோடோ புறப்பட்டுத் திறமாய்நில்லு
ஊணவே சாதகத்து நிலையைக்கூடி
உத்தமமா மாளுட சமாதியாச்சே. (52)

சமாதியெல்லாம் காணுமுன்னே சாதகத்தைக்கேளு
தம்பித்து வாசியைநீ மூட்டியூட்டு
உமாதியா மூலங்கண் டுரைத்தபின்பு
யோகமெல்லா மொவ்வொன்று யூட்டிப்பாரு
மமாதியா மாயமெல்லாந் தள்ளிப்போடு
வகையாக சமாதியஞ்சும் வாய்க்கும்வாய்க்கும்
நமாதியாய் நாலுமங்கே முன்னே தோன்றும்
நாடினுல் சமாதிக்கு முறையீதாமே. (53)

முறையான மவுனமென்ற சமாதிகேளு
மொழிவதுவே எளிதல்ல குருசொல்லவேணும்
மறையான மாயையற்று மனம் செம்மையாகும்
மாசற்ற ராஜமென்ற யோகந்தானும்
அரையான மனஞ்சென்று அறிவிற்கூடும்
அதிகமா மகண்டவெளி காந்திகாணும்
பரையான அடுக்கெல்லாம் படுதீப்பத்தும்
பண்பான மவுனத்தைப் பரையிற்றானே. (54)

பரைகிறேன் அகாரமது மூலம்நிற்கும்
பண்பான உகாரமது கண்டம்நிற்கும்
வரைகிறேன் வகாரமது மனேன்மணி யில்நிற்கும்
வாகாக யிழுத்தொன்றுய்க் கூட்டினுக்கால்
நிரைகிறேன் மவுனமது அறிவிற்கூடும்
நின் றுரைக்கிற் கண்டந்தா னுள்ளேகொள்ளும்
இரைகிறே னிருக்கையிலும் நடக்கையிலு மைந்தா
இருந்துரைக்கப் பிரபஞ்ச மெளிதாய்ப்போச்சே. (55)

போச்சுதே பசாசாச்சு முன்பின்னில்லை
புதுமணியாய்த் தசனுதங் காதிற்கேட்கும்
ஆச்சுதே மதிகோடி வன்னிகோடி
அடங்காத ரவிகோடி காந்தியாகும்
பாச்சுதே நின்றங்கே பார்க்கும்போது
பண்பாக முழுங்கிவிடு மவுனப்பாம்பு
தேச்சுதே சடத்துக்கு சிதைவுங்காணும்
செடந்தானுஞ் சித்தியாய்த் திடமாய்ப்பண்ணே. (56)

பண்ணியே தத்துவங்கள் சூழ்ந்து நிற்கும்
பருவமாய் தத்துவத்தின் தெரிசனையைக்கண்டு
அண்ணியே ஞானத்துக் காதிபீடம்
அண்டமெல்லாம் போகுதடாவுருவித்தாண்டி
வண்ணியே ஞானமென்பார் வாய்ப்பேச்சாலே
வந்துதென்று விந்தைசொல்லி வாதுக்காடி
கொண்ணிலே குணங்குறிகள் காட்டமாட்டார்
கொடிதான திருப்பாட்டு கூறுவாரே. (57)

கூருவார் குருபதத்தின் தத்துவம்தாண்டிக்
குறிப்பான சிவனுட தெரிசனத்தைக்கேளு
தேறுவார் சிவனென்ன சிவமேயாச்சு
திருமூர்த்தி யென்றதுவு மதுவேயாச்சு
ஆறுவார் தசையுடம்பு சத்தியாச்சு
அரைகிறே னதில்நின் று. உரைபோட்டது
ஊறுவா யுன்னியதில் நின்றுயானால்
உயரவல்லோ அதனமா யிழுங்குந்தானே. (58)

அதனமாம் யோகங்கள் செய்தாலுகில்
அறியாமற் பூரிக்கி லொதுங்கிற்றூலல்
விதனமாய் விலாப்புரத்திற் சொருகிக்கொள்ளும்
விளிப்பான கண்போகும் முகம்கோணிப்போகும்
விதனமா மூடம்பெரிவு விக்கலாகும்
மேலெல்லாம் வேர்வையாய் வலியேகாணும்
கதனமா மடையோகங் காமயோகம்
கடிதான லயயோக கர்மங்கேளே. (59)

கர்மமாம் பூதமெல்லாம் லயமேசெய்து
காரணமாந் தத்துவத்தை லயமேசெய்து
நாமமாம் குருபதத்தில் நாடிநின்று
நயக்துமே ஏறுவார் கடினமெத்த
பாவமாய்ப் பரியங்கி யோகத்தாலே
பரிந்துமலம் விடுவார்கள் கர்மங்கர்மம்
நிர்வமா மிக்கான ராஜயோகம்
நிலைத்தல்லோ சாதித்து நினைவாய்ப்பாரே. (60)

நினைவாக யிதின்மேலே மந்திரயோகம்
நேரான தசதீட்சை முறையோடொக்க
அனைவாக அகண்டவெளி சக்கரத்தே
ஆடிநின்று பிராணுயந் தன்னையேற்றி
மனைவாக நிற்குணத்தே மவுனத்தாடில்
மருவிடாய் மருவிடாய் பூரணத்தில்
வினைவாதி தீட்சையையார் சொல்லப்போரார்
விரைந்துணர்ந்த பெரியோரை அடுத்திடாயே. (61)

பாசாணக் கட்டு.

அடுத்திட்டு வெள்ளெருக்கம் பூவுதன்னை
அன்பாக இடித்துமே சாறுவாங்கி
படுத்திட்டுப் பால்வேறே வைத்துக்கொண்டு
பாசாணந் தனக்குநீ சுருக்குபோடு
விடுத்திட்டுப் பாலோடு சாறுதானும்
மிகமாறி மாறியே விரைந்துபோடு
தடுக்கிட்ட விரையரைத்துக் கலசங்கட்டிச்
சுத்தமாய் வேரைக்கப் பழுப்பின்சாறே. (62)

சாறினுல் வேரரைத்துக் குகைபோற்பண்ணித்
தாங்கியே கவசத்தை யதற்குள்வைத்து
வேறினுல் மேல்மூடி மண்ணுஞ்செய்து
வியப்பான கெசபுடமாய் மருவிப்போடு
தேறினுற் பாசாணங் கட்டியேதான்
சிறந்துநிற்குங் வெள்ளீயங் குகையுருக்கி
தாறினுற் பாஷாணஞ் சமனுயீய்த்தால்
சமரசமா யுருகியொன்றுய்த் தகர்ந்துபோமே. (63)

தகர்ந்துநின்ற யிடைக்குஅயப் பொடியைக்கூட்டிச்
சாங்கமாய்க் காரமிட்டு உருக்கியாட்டி
மகர்ந்துநின்ற மதிதானு மதற்குநேராய்
மாட்டியே யுருக்கியபின் கல்வத்திட்டு
புகர்ந்துநின்ற பொடியாக்கிச் சூதங்கூட்டிப்
புகழான காரம்வெள்ளைப் பாசாணந்தான்
மூகர்ந்துநின்ற பொடிக்குக்கால் வாசிகூட்டி
மூர்க்கமாய்ப் பால்விட்டு அரைத்திடாயே (64)

அரைத்துமே வில்லைதட்டிக் காயப்போட்டு
அதிகமாம் பூரீருக் குள்ளேவைத்து
நரைத்துமே காற்சாதம் கமலம்போலே
நலமாக யெரியவிடு களங்கமாகும்
பொரைத்திட்ட ரவிதனிலே ஐம்பதுக்கொன்று
பொருந்தவே கொடுத்தாக்கால் மதியுமாகும்
அரைத்திட்ட ரசிதமல்லோ சீனவெள்ளி
ஆயிசொல்லச் சீனருக்கு மகிழ்ந்திட்டாரே. (65)

மகிழ்ந்துமே யிந்தநூல் காலாங்காண்டம்
மதிமறந்து வெளிதிறந்து சொல்லிப்போட்டேன்
தகிழ்ந்துமே சீவனத்துக் கானவேலை
தாய்சொல்ல யானுமே சொல்லிவிட்டேன்
நகழ்ந்துமே செய்துகொண்டு யோகம்பாரு
நலமெல்லா மைந்தாங்காண் டத்திற்சொன்னேன்
பகழ்ந்துமே யிந்தநூல் வெளியிற்போட்டால்
பராபரையின் பாதமங்கே நிலைத்திடாதே. (66)

நிலையாதுயென் றுரைத்தா தேதுவென்றால்
நிமலனுற் பிரமகெற்பம் விண்டதாலே
விலையாது பதினெண்பேர் நூலிலில்லை
விந்தையாம் பரிபாஷை சொன்னதாலே
கெலியாலே பிரமகெற்பம் வெளியாய்ச்சென்னேன்
கிளிபட்டுப் போகாமற் சிவனுர்பாதம்
பிலையாது பதினெண்பேர் சொல்லைத்தட்டிப்
பிலன்பண்ணி யீசரனுத் தாரத்தாலே. (67)

உத்தாரந் தான்கேட்டு வெளியிற் போட்டேன்
உத்தமர்கள் பிழைக்கவென்று வெளியாய்ச்சொன்னேன்
வித்தாரமாகவே வெளியிற் போட்டால்
விதனமெத்த வக்கிடுக்கா னையாசொன்னேன்
வித்தார உன்குடும்பம் நசித்துப்போகும்
வீசரனுர் மேலாணை வெளிவிடாதே
பித்தாரப் பதினெண்பேர் மேலேயாணை
பிரியமுள்ள நந்தியின்மே லாணையிட்டேன். (68)

இட்டபடி பின்நூறு மறைவாய்ச் சொன்னேன்
இந்தநூல் மூன்நூற்று ஐந்துகாண்டம்
பட்டபாடு மெத்தவுண்டு சித்தராலே
பகைவந்தால் வரட்டுமென்று படித்தேன்யானும்
பட்டபா டுரைக்கவென்று லென்னுற்கூடா
பராபரையின் தன்னருளால் அருளுமானேன்
பட்டபா டித்தனையு மாருக்கென்றால்
பரமரக சியமறிந்த யோகிக்குத்தான். (69)

யோகிகளே உங்களுக்கா யிந்தமட்டும்
உண்மையா யானுரைத்தே னைந்துகாண்டம்
யோகிகளே காண்டத்தைக் கடைதலையும்பார்த்து
ஓகோகோ மனதில்வைத்து வெளிவிடாதே
யோகிகளே வெளிவிட்டால் நான்சொன்னசாபம்
இடுக்கண்வரு மிடுக்கண்வரும் நாசமாவாய்
யோகிகளே சாபத்துக் கிடங்கொடாதே
இந்தநூ லறியாம லடக்கம்பண்ணே. (70)

அடக்கமெத்த அடக்கமெத்த யிந்தநூல்தான்
அம்பரமாம் பரதேசி சபிப்பாரென்னே
இடுக்கமெத்த வர்திடுங்காண் சொன்னேன் சொன்னேன்
இந்தநூல் குகைமறவா யிருந்தநூலே
அடக்கமெத்தச் செய்துவிட்டார் சித்தரெல்லாம்
அதற்காக பட்டபாடு மெத்தவுண்டு
அடக்கமெத்த அடக்கமெத்த சொன்னேன்யானும்
அவையடக்க மாகவைத்துப் பாருபாரே. (71)

நவலோகக் களங்கு.

பாருஒரு களங்குவகை சொல்லக்கேளு
பாருலகிற் சொல்லாதே உண்மை சொன்னேன்
ஆருஒரு அரப்பொடிதான் பலமீரெட்டி
அழுந்தவே பழச்சாற்றி லூரவைத்து
நாருஒரு நாலாநாட் கழுவிவாங்கி
நலமாக உலரவிட்டு நாட்டங்கேளு
தூருஒரு தருசியது பலமும்பத்துத்
தடுக்கான வெடியுப்பு நீரிற்றேயே. (72)

தோய்த்துமே பத்துநாள் காயப்போடு
சுருக்காகச் சவுக்காரச் செயநீர்பத்து
ஆய்த்துமே அடிக்கடிதான் துவைத்துப்போடு
ஆண்மையா யிருபதுநாட் காய்ந்தபின்பு
தேய்த்துமே சீனமொடு அண்டோடுரெண்டும்
சேர்த்தரைத்துப் பழச்சாற்றில் வில்லைபண்ணி
காய்த்துமே கனபுடமாய்ப் போட்டெடுத்துக்
காரியமாந் தருசியிலே கவசங்கட்டே. (73)

கட்டியே சீலைசெய்து குக்குடமாம்புடத்தில்
காயவிட்டுப் போட்டெடுக்க குருவுமாகும்
தேட்டியே யிக்குருவை செம்பரத்தம்பூவில்
சிறுகவிட்டுப் பிசைந்துமே சாறுவாங்கி
கூட்டியே குதிரையென்ற பாஷாணந்தான்
கூட்டியே அரைபொடிக்குப் பாதிதானும்
காட்டியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கலந்தரைப்பாய் மூன்சாற்றிற் கலரத்தானே. (74)

கலரவே யேழுநாள் பூச்சாறுவிட்டு
கலந்தரைத்து அரபொடியிற் பிசரிக்கொண்டு
மலரவே பின்பொருநாட் பூச்சாறுவிட்டு
மயனம்போ லரைத்துமே புடத்தைப்போடு
உலரவே குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
உருண்டுமே மணியாகும் அப்பால்வைத்து
அலரவே உருகுமயம் பலந்தானென்று
அடுக்கான காந்தமது பலமுமொன்றே. (75)

ஒன்றான குதிரைப்பல் பாசாணமொன்று
உரவாக மூன்றையுந்தான் பூச்சாற்றிலாட்டி
பண்டான புடம்போட்டுக் குகையுருக்கில்
பாகமாய்க் காந்தஅயம் சத்தாய்நிற்கும்
தண்டான சத்தெடுத்துப் புரம்பாய்வைத்துத்
தாக்கான நிமிளையது பலந்தானென்று
மூண்டான மூன்னுருக்கு யிரும்புஒன்று
மூனையான சிலையதுவும் பலமுமொன்றே. (76)

பலமூன்று கல்வத்தி லிட்டுக்கொண்டு
பாங்கான பூச்சாற்றி லரைத்துமைப்போல்
பெலமூன்று ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடு
பிரளவே குகையிலிட்டு உருக்கிப்போடு
சலமூன்று சத்தெடுத்துப் புரம்பாய்வைத்துச்
சமரசமாய் மூன்றுக்கு யிரும்புவொன்று
திலமூன்று துத்தமொன்று தாரமொன்று
செம்பரத்தம் பூச்சாற்றி லரைத்திடாயே. (77)

அரைத்துமே ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடு
ஆனபின்பு குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
தரைத்துமே சத்தெடுத்து அப்பால்வைத்துத்
தருக்காகு முன்னுருக்கு யிரும்பதொன்று
கரைத்துமே கிருஷ்ணஅப் பிரகமொன்று
கடிதான வீரமது பலமுமொன்று
திரைத்துமே செம்பரத்தம் பூச்சாற்றிலாட்டிச்
செப்பில்வைத்துப் புடம்போட்டு உருக்கிப்போடே (78)

போடென்ற சத்தெடுத்துப் புரம்பாய்வைத்துப்
புரண்டதோர் மூன்னுருக்கு யிரும்புஒன்று
தேடென்ற செம்பதுவும் பலமூமொன்று
செப்பமாய் லிங்கமது பலமூமொன்று
காடென்ற செம்பரத்தம் பூச்சாற்றிலே
கலந்தரைத்துப் பனிரெண்டு சாமத்தானும்
ஆடென்ற அகலிலிட்டுப் புடத்தைப்போடு
அதமாக உருக்கியே மணியாய்வாங்கே. (79)

வாங்கியே மூன்னுருக்கு இரும்புவொன்று
வங்கமொன்று காரீயம் பலந்தானொன்று
தேங்கியே கெவுரியது பலமூமொன்று
செம்பரத்தம் பூச்சாற்றி லரைத்துமைப்போல்
ஓங்கியே ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடு
உருக்கியே குகைதன்னி லப்பால்வைத்து
நாங்கியே நாகமது பலந்தானொன்று
நலமான தாரமொன்று யிரும்புவொன்றே. (80)

இரும்போடு மூன்றையுமே ஒன்றாய்க்கூட்டி
ஏற்றமாம் பூச்சாற்றி லரைத்துமைப்போல்
பெரும்புடமா யோட்டில்வைத்து மூடிப்போடு
பின்புமே குகையில்வைத்து உருக்கிப்பாரு
அரும்புபோல் நாகமது மணியுமாகும்
அப்பாலே யெடுத்துவைத்து அரையக்கேளு
தரும்புபோல் வெள்ளீயம் பலமூமொன்று
தப்பாவாய் மூன்னுருக்கு யிரும்புவொன்றே. (81)

உருக்கியே ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
உடைத்துமே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
நெருக்கியே துருசியது பலமூமொன்று
நன்னயமாய்ப் பலச்சாற்றி லரைத்துமைபோல்
பெருக்கியே புடம்போட்டு மூடிப்போடு
பின்புமே உருக்கிடவே மணியுமாகும்
மருக்கியே மணியெடுத்து அப்பால்வைத்து
மாட்டுதற்குத் தங்கமொரு பலமுந்தானே. (82)

தங்கமொரு பலந்தன்னைத் தகடாய்த்தட்டித்
தனியான காவிதனைப் பழச்சாற்றுலரைத்து
பொங்கமாய்த் தகட்டுக்குப் பூசிப்பூசிப்
புரம்பாகக் கரியோட்டில் காய்ச்சித் தோய்ப்பாய்
பங்கமாய்ப் பதின்மூன்று தரந்தான்தோய்ப்பாய்
பாங்கான மூன்னுருக்கு யிரும்புவொன்று
துங்கமாம் நிலீலையொன்று காந்தமொன்று
சொல்லான துத்தமொன்று சூட்டிடாயே. (83)

சூட்டடா அப்பிரகச் சத்துவொன்று
சூட்சமாய்ச் செம்பொன்று காரீயமொன்று
காட்டவே நாகமொன்று வெள்ளீயமொன்று
நவலோகம் பத்தையுந்தான் ஒன்றுய்க்கூட்டி
வாட்டிட்ட குகையிலிட்டு உருக்கித்தீரு
வட்டுப்போற் வில்லையாய் வளமாய்ச்செய்து
தீட்டிட்ட திருசியென்ற செம்புரெண்டிற்
சேரொன்று நவலோகக் களங்குமாமே. (84)

களங்கத்தை மதிதன்னி லிருபதுக்கொன்று
காட்டிடவே கனகமாங் கருப்பாய்நிற்கும்
உளங்கற்ற ஓட்டில்வைத்து ஊதிப்போடு
உருக்கியே உரைத்திடவே யேழுமாற்று
தினங்கத்தைத் தேவதைக்கு ஆபானம்பண்ணிச்
சிறப்பாக மூட்டிடவே மூத்தியெய்தும்
அளங்கத்து யித்தனாள் மனதில்வைத்து
ஆபிக்கே ஒப்பாக அரைந்திட்டேனே. (85)

அரைந்திட்டே னிதைத்தொட்டுச் செலவுசெய்து
அன்பான கற்பத்தைப் பண்ணித்தின்னு
திரைந்திட்டுப் போகாமற் காயந்தானும்
சிங்கென்ற கடிவாளந் தேசிக்கிட்டு
கரைத்திட்டு மனந்தன்னை அறிவிற்சொக்கிக்
கசகாமல் கண்களித்துக் குருபதத்தில்
நிரைந்திட்ட நடனத்தைத் தெரிசித்தப்பால்
நீங்காமல் மவுனத்தி லுண்ணிடாயே. (86)

உண்ணியே யோகத்தை யென்னேரந்தான்
உத்தமித்தாய் பதந்தன்னில் மனதைக்கட்டி
மண்ணுன மண்டலத்திற் விளக்கைத்தூண்டிற்
மாசற்ற ஒளிகாணுங் கண்ணேகூசும்
பண்ணியே பலகாலம் வேதாந்தத்திற்
பழக்கமாய்க் கடலெல்லாம் பாருபாரு
முண்ணியே பெண்மாயை தன்னில்நின்று
மூழியாதே பேய்போலே முனிந்துகூடே. (87)

முனிந்துமே யோகத்தில் மனதைமூட்டு
மூர்க்கமா யைம்புலனே மூனேந்துசாடு
கனிந்துமே காயத்திற் சட்டைபோக்கு
கரைகாணு தத்துவத்திற் கருத்தையோட்டு
நளிந்துமே சஞ்சலத்திற் மனக்குரங்கு
நாடியே போனபடி நாடொட்டாமல்
குளிந்துமே கண்ரெண்டுங் குறியிற்கூடிக்
குவிந்துநின்று ஒன்றுக்கு ளாடிடாயே. (88)

ஆடுவது யெப்பவென்றுற் சொல்லக்கேளு
அலையாத சமூத்திரத்தி னலையைப்போலே
கூடுவது நினைத்துடனே கொளுகிக்கூடும்
கூசினுல் மனந்தாழு மாயைசண்ணும்
தேடுவது சிக்கிரத்திற் சித்திதேடு
திடப்படுத்தி மனதுதன்னே மரித்துக்கட்டி
பாடுவது யென்னேர மாயிபாதம்
பணிந்துமே கனிந்துருகிப் பாடுபாடே. (89)

பாடுபட்ட பணத்தினுற் பலனுண்டாமோ
பக்குவமாங் கைனுலே பலனுண்டாமோ
சோடுபட்ட தம்பியாற் பலனுண்டாமோ
சுக்கிலத்தில் பிறந்தவரால் சொர்க்கமாமோ
ஊடுபட்ட பந்துவினு லுதவியாமோ
உண்மையா யுரைத்தமொழி யுறுதியாமோ
தேடுபட்ட அறுசுவையாந் தீனியாலே
செடந்தானும் பிறப்பிறப்பு செனித்தவாறே. (90)

செனித்திடா திருக்கவல்லோ சித்தரெல்லாம்
செப்பினுர் சாஸ்திரங்க ளனந்தங்கோடி
தனித்திடா மனதுவை ராக்கியத்தால்
சாதிக்க அநேகநாள் சமாதியுற்று
கனித்திடா கற்பங்க ளுண்டுகொண்டு
கருணைநிதிக் கடாட்சத்தால் சித்திபெற்று
பினித்துமே மனதுவை ராக்கியத்தால்
பெரியோர்கள் பதமிறைஞ்சிப் பிடித்துக்கேட்டே. (91)

பிடித்துமே மனதோர்மை யாகநின்று
பேரான யோகியரைப் புத்திகேட்டு
மடித்துமே பெண்ணுறவு மயக்கந்தீர்ந்து
மாயமென்ற மாயமெல்லாம் மடித்துத்தள்ளி
நொடித்துமே பிரபஞ்ச செகசாலத்தே
நூணுக்கமாய்க் கீழ்தள்ளி மாயையுற்று
படித்துமே வேதாந்தக் கூட்டத்தோடு
பராபரத்தாய் பதமதனைப் பத்தினாரே. (92)

பத்தியே வஸ்துசுத்திப் பானம்பண்ணி
பாங்கான குண்டலியி லகாரம்வைத்து
புத்தியாய் மேலேறிஉன்மனை யைத்தாண்டி
போக்கோடே தெருவீதி வலமாய்வந்து
அத்தியென்ற தத்துவமாங் குப்பையெல்லாம்
ஆறஞ்சு அங்கங்கே யெல்லாங்கண்டு
சித்தியென்ற நடனவொலி செவியிற்கேட்டு
சிற்சபையில் குடியிருந்து சிறந்திட்டாரே. (93)

சிறக்கவே பசிதனக்கு வாதஞ்சொன்னேன்
சிறப்பாக யிருக்கவல்லோ கற்பஞ்சொன்னேன்
திறக்கவே சமாதிக்கு வாசிகொண்டு
திரமாக யிருப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
பார்க்கவே யோகமுதல் ஞானம்சொன்னேன்
பாருலகி லிருப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
சேர்க்கவே சரக்குகளை மடக்குதற்குச்
செயரூபங் குருபிராக்குஞ் செப்பினேனே. (94)

பிராக்காத ஜெகத்தோடு அண்டபதமெல்லாம்
பெலமாகக் குச்சியில்வைத் திருந்தகன்னி
பிராக்காக அவளேவிட்டு யோகம்பார்த்தேன்
பேயரே அகண்டத்தில் ஞானம்பார்த்தேன்
பிராக்காக ஒன்றுமில்லே மனம்பேயாச்சு
பேயான கூத்தைவிட்டுத் தேறமாட்டார்
பிராக்காக அவளேவிட்டார் ஞானங்கண்டார்
பெலத்தளிக்கும் ஆசையென்ற பாம்புதானே. (95)

ஆசையாய்ப் பாம்பையல்லோ பூண்டாரீசன்
அருகோடு மதியதவும் கொன்றைசூடி
ஆசையாய்ப் பாம்மையல்லோ பூணூல்போட்டார்
அதிவிரைவாய்க் கரியுரித்த பிஞகபாணி
ஆசையாய்ப் பாம்பைக்கங் கணமாய்ப்பூண்டார்
அரியுருவைத் தோலுரித்துப் பாதந்தூக்கி
ஆசையா யுன்மனேக்கு மோதிரம்போட்டார்
அருமையா யொருகாலா லாடினூரே.. (96)

ஒருகாலின் கூத்தையல்லோ ஆத்தாள்மெச்சி
உட்கார்ந்து அண்டையிலே வைத்துக்கொண்டாள்
அருகாலி னவளருகே அரனுமைந்தா
அவனவளும் ஒன்றென்று அறியார்கண்டாய்
இருகாலி னிடமெங்கே ஒடுங்கினதுமெங்கே
ஏகமாய் காணுகிற நடனமெங்கே
குருகாலின் கண்டத்தின் சோதியெங்கே
கூசாமல் மவுனத்திற் கூடிக்காணே. (97)

மவுனத்தி லெங்காளு மிருந்துகொண்டு
மதியான தன்னறிவே யென்றியெண்ணி
மவுனத்தில் சமாதினி லிருந்துரைத்து
மக்களே பிராணயஞ் செய்துகொண்டு
மவுனமதில் மனமிளகி அறிவிற்கூடி
மாசற்ற மருட்பாலே உண்பீரப்பா
மவுனமதில் பராபரத்தில் பத்திமுத்தி
மாண்பான பாத்துக்கழி வில்லைதானே. (98)

இல்லையே பராபரத்தின் செய்கைதானும்
எப்படியோ எவ்வாறே யிருப்பாரென்றுல்
தொல்லையே பூரணத்தி லுள்ளேசொக்கித்
துரியத்தின் சுடர்போலே தேகமாக்கி
மல்லையே மனத்தையக்கப் பூரணத்தில்
மருவியே மற்றதெல்லா மவித்தையென்று
வில்லையே உருக்கெல்லா மனந்தான்காணு
மிகுந்தபோ கத்தைவிட்டோன் ஞானிதானே. (99)

தானென்ற ஐந்தாறுஅஞ்சு சொன்னேன்
தற்பரமாய் முதலிலக்நூறு வயித்தியஞ்சொன்னேன்
நானென்ற கருக்கடையா மறுஐந்நூறு
நலமாகச் சொன்னபின்பு கலிக்கியானந்தான்
கோனென்ற யிரண்டடியாய்ச் சொன்னேன்பூவில்
குருநூலாய்க் காவியமைந் நூறுஞ்சொன்னேன்
தேனென்ற பரிபாஷை ஐந்நூறுதன்னைத்
திறமாகச் சொல்லிவிட்டேன் காண்டமுற்றே. (100)

உரோமரிஷி பரிபாஷை

நாலாங்காண்டம் 100 முற்றிற்று.



உ

பரமபதி துணை.

உரோமரிஷி

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை

5-வது காண்டம் 100.

காப்பு.

பராபரமாய்ப் பரமான ஐக்தாங்காண்டம்
பார்புகுண்ட ரென்குருவின் பாதம்போற்றி
தாராதரமா யெனையாண்ட சோதிபாதம்
தற்பரமே அற்புதமே மனமேயாகி
ஆராதரமாய் பூரணமாய் யேகமாகி
அகாரா யேகாந்த ஒளிவொளியாய்
மாமரமாய் மண்ணுவிண்ணு மொன்றதாகி
மவுனமென்ற விஞ்ஞகனூர் காப்புத்தானே. (1)

காப்பென்ன யிந்தனூ லுலகிலில்லை
கபடில்லை மறைப்பில்லை பரிபாஷையில்லை
ஆப்பென்ன அடித்தாப்போல் வழிலைமார்க்கம்
அரைந்தகிறற் சித்தரெலாங் கூடிக்கொண்டு
வாப்பென்ன பரிபாஷை பிர்மகெற்பம்
வாய்திறந்து சொல்வதற்கு ஞாயமுண்டோ
ஆப்பென்ன சிவனிடத்திற் போவோமென்றூர்
அப்போதே சிவனிடத்தில் முறையிட்டாரே. (2)

முறையிட்ட படியாலே சிவன்தானென்னை
மோசம்வரும் ரோமரிஷி யுமக்குத்தானும்
குறையிட்ட சித்தர்கள்முன் யிந்தநூலைக்
குகைமறைவாய் வையுமென்று உத்தரவுசெய்தார்
கிறையிட்ட சட்டமுனி யிருநூறுதீட்சை
கிழித்தாரே அய்யய்யோ தோசந்தோசம்
பறையிட்ட படியாலே பின்னேநூறும்
பரிபாஷை யாகவுந்தான் பாடினேனே. (3)

பாடினதே யல்லாமற் சமூசயங்கள்
பரனறிவார் மற்றவர்க ளறியப்போகா
வாடியந்தக் குகைமறவா யிருந்தநூலை
வஞ்சமற்ற ஞானிகள்தான் பிழைக்கவென்று
ஆடினதோ ரிவ்வைநூ றஞ்சாங்காண்டம்
அறியாமற் பாடிவிட்டே ஞண்மையாக
நாடினதோ ரிந்தநூல் வெளிவிடாதே
நாசமா யவன்குடும்பம் நசித்துப்போமே. (4)

போமென்று யிந்நூலைக் காட்டாதேயப்பா
பொன்கோடி யீந்தாலும் நூலியாதே
வேமென்ற கோடிதனங் கொடுத்தாலுந்தான்
வேகாத பிரமக்கல் காட்டுமிந்நூல்
ஏமென்ற பிர்மகற்பங் கல்மலிகளெல்லாம்
எத்தனையோ கோடிதங்கம் பழுக்கும்பாரு
நேமென்ற யிந்தநூல் பதனஞ்சொன்னேன்
நெரியுற்ற பெரியோர்க்காய்ச் சொல்வினேனே. (5)

சொல்லாமற் சொல்லுகிறே னிந்தநூலைச்
சொற்பமென்று யிந்நூலை யீய்ந்தீரானால்
கொல்லாம லிடுக்கமெத்த வரகுமாகும்
குடிகெடுத்த சித்தர்நம்மைச் சபிப்பாரப்பா
வல்லாமல் யான்பயந்து நடுக்கமானேன்
வல்லவர்கள் தான்பயந்து நடுக்கமானூர்
கெல்லாமற் கீழிருந்த அரனுந்தாயும்
கீழ்மேலும் பிரண்டுருண்டு முழக்கமாச்சே. (6)

மூழக்கமில்லை சத்தியவள் முன்னேவந்தாள்
முழங்கியபின் சிவனுமங்கே ஒளியுமானார்
பிழக்கமில்லை சத்தியவள் நீராய்நின்றாள்
பின்வந்த சிவனுமங்கே வெளியாய்நின்றார்
இளக்கமில்லை சத்திக்குள் சிவனடக்கமானார்
என்னஐயோ யிருவருமே ஒன்றுப்போனார்
விளக்கமில்லை யிருவருமே தீட்சையாலே
வேதங்கள் சாஸ்திரங்கள் மறைத்தார்தானே. (7)

மறைத்ததினால் வாதிகள்தானேங்கிப்போனார்
மண்ணும்விண்ணு மறியாத கலக்கத்தாலே
அரைத்ததினா லமரபட்சம் பூர்வபட்சம்
அன்றைக்கே தாய்தகப்ப னென்றுமானார்
பரைத்ததனால் தைமாசி பங்குனிக்குள்
பகைகோள்க ளில்லாமற் பண்பாய்ப்பாரு
வரைத்ததனை வகைவிபரஞ் சொல்லவென்றால்
வழியேது கரையேது துரைதானேதோ. (8)

துரையறிந்து யெடுத்துவிடத் தீட்சைகீர்தான்
துரையுனக்குச் சொல்லவென்றால் பயமோமெத்த
நிரையறிந்து சொன்னவர்க ளாருமில்லை
நிறைந்தபரி பூரணத்தை யென்னசொல்வேன்
வரையறிந்த தபோதனர்க ளறிவாரிந்த
வணக்கமெறி யறியாத மாண்பர்தானும்
திரையறிந்து பேசாத அசட்டுமாண்பர்
தினையளவு பொன்காண மாட்டார்தானே. (9)

மாட்டாத மாடுகளே கெங்கைதீட்சை
மறைவின்றித் தானுரைத்தே னூற்றுக்குள்ளே
பாட்டாத கெங்கையடா சமூத்திரமேமூலம்
பாறையுப்பாய்த் தான்வளர்ந்து யிருக்குமப்பா
காட்டாத படியென்ன சொல்லக்கேளு
கங்கையைத்தான் சிவனுமங்கே சடையில்வைத்தார்
காட்டாத பூரணமே சிவனுஞ்சத்தி
நலமாக யிருவருக்குந் தீட்சைதானே. (10)

தீட்சையடா பத்தக்கு அதிகம்வேண்டாம்
தியங்கியே சித்தர்கள்தா னனேகஞ்சொன்னர்
நீட்சையடா பிரமகெற்ப சுண்ணந்தானும்
நிறையேது வழலேபச்சை நிறையங்கேது
பாட்சையடா சிவன்சத்தி ஒன்றுகத்தான்
பயமெத்த வாகுதடா யெனக்குத்தானும்
மாட்சையடா சுண்ணமிட்டுக் கடைந்துவைக்க
மகமேரு கெங்கையவள் தெளிந்தாள்பாரே. (11)

பார்பச்சை சிவன்சத்தி ஊசரமேயாகும்
பங்கம்வரு மூடிமே சத்திசத்தி
மார்பச்சை சத்தியுடன் சேர்த்தீராஞல்
மக்களே மரணமூனக் குண்டோஅய்யா
ஆர்பச்சை பிரமகெற்பச் சுண்ணம்சுண்ணம்
அரகரா மூவருமே சுண்ணமானூர்
வார்பச்சை யிவ்விதமாய்க் கடைசல்தீர்ந்தால்
வந்துமங்கே தானுதித்தாள் கெங்கைதானே. (12)

கெங்கையர் மாகாசச் சிவனூர்விந்து
கிழுப்புக் கடுத்திருந்த கீட்காரந்தான்
கங்கையாம் பிரமகெற்ப மகாசுண்ணும்பைக்
கனகமெனுந் தியுப்பைப் பண்பாய்க்கேளு
பங்கையாம் வாரிச்சுத்த கெங்கையுள்ளே
பணவிடைதான் மூப்பிட்டு ரவிமூன்பார்க்க
மங்கையாம் நாளிதனிற் தயிர்போலாச்சு
மங்கைநா தந்திரண்டு ஆணியாச்சே. (13)

ஆணியாம் வயிரம்போற் கட்டிப்போகும்
அண்டமுத்து மணிபோலே சோதியாகும்
பாணியாய்க் கண்சூசும் வயிரம்போலே
பரமசிவ னுப்பினுட பழக்கத்தாலே
மாணியா மிதையெடுத்து அஞ்சுசுண்ணம்
மகத்தான குகையில்வைத்துச் சீலைசெய்து
ஏணியாங் கவுதாரிப் புடத்திற்போட
ஈசனுப்புச் சுண்ணமதா யிருக்குந்தானே. (14)

ஈசனென்ற சுண்ணமல்லோ வழலேச்சுண்ணம்
ஏமத்தை யுண்டாக்கு மீசன்சுண்ணம்
ஈசனென்ற சத்திசிவஞ் சேர்ந்தசுண்ணம்
இன்பமாய் நாதவிந்து சேர்ந்தசுண்ணம்
ஈசனென்ற காரசார ரத்தின்சுண்ணம்
எனையாண்ட அண்டபிண்டந் தெளிவாஞ்சுண்ணம்
ஈசனென்ற உருக்கினத்துக் காதிசுண்ணம்
இந்திரவி தண்ணீரு முறுதியாமே. (15)

உறுதியுள்ள சிவசுண்ணம் சின்மயமாஞ்சுண்ணம்
உற்றதொரு ரிஷிகளுக்குச் செப்புஞ்சுண்ணம்
உறுதியுள்ள பதினெண்பேர் சித்தர்க்கெல்லாம்
முத்திவழி காட்டுகின்ற சத்திசுண்ணம்
உறுதியுள்ள துவாதசந் கடந்தசுண்ணம்
மூர்க்கமுள்ள குண்டலிக்கு ளடங்குஞ்சுண்ணம்
உறுதியுள்ள கடல்கடைந் தமுதமுண்டு
முப்பாழும் நின்றிலங்கும் பரஞ்சுண்ணம்பே. (16)

பரசுண்ணம் தொட்டிலுப்பு வெளியுமாச்சு
பராபரமே யெனையாண்ட ஈசன்சுண்ணம்
பரசுண்ண மண்ணெடுத்து சலத்திலூலே
பக்குவத்தி லுற்பிறந்த யிசனுப்பு
பரசுண்ணம் வெடியுப்பே சிவப்புப்பாகும்
பலகாளிற் சூடனென்று செப்பலாகும்
பரசுண்ணஞ் சொன்னதல்லா லுப்பின்மார்க்கம்
பகுத்தறிய ரெண்டாங்காண் டந்தான்பாரே. (17)

இரண்டான காண்டத்திற் சிவனுப்புத்தான்
எனையாண்ட ஈசனுப்பைச் சொல்லிப்போட்டேன்
இரண்டான பாறையுப்புச் சொல்லவென்றூல்
எந்தவிதஞ் சலத்தினிலே உண்டாச்சப்பா
பெண்டான கல்லுப்பு வென்றும்பேரு
பிரபலமாஞ் சிவகன்னி யென்றும்பேரு
பெண்டான கெங்கையென்று யிதற்குப்பேரு
பேதமற்ற நிராபோகப் பெருமைதானே. (18)

தானென்ற சுத்தசல நீட்சையுப்புத்
தன்மையென்று கட்டல்மாது திரண்டஉப்பு
நானென்ற சீனவுப்பு சத்தியுப்பு
நன்முன கல்லுப்புத் தண்ணீருப்பு
மானென்ற கரியுப்பு ஆதித்தனுப்பு
மகத்தான அங்கியுப்பு முடியினுப்பு
ஆனென்ற அடியுப்பு மூடியினுப்பு
அரகரா புதையுண்டா ரீசன்முனே (19)

தானுன அண்டத்தின் மகிமைசொல்லத்
தனேயாண்ட ஈசனு ருத்தாரத்தால்
வானுன அண்டவித்தை பார்த்துத்தேர்ந்து
வகையுடனே கருணைவைத்து வழியாய்ச்சொன்னர்
பானுன பரமசிவ ஞயன்முனும்
பக்குவத்தி லடியனுக்குப் பருவஞ்சொன்னர்
மானுன வண்டருக்குப் பொல்லாக்காமம்
மறுமூடர் தானுமிதை நினைக்கொண்ணுதே. (20)

நினையாத அண்டமதிற் பொருளொன்துண்டு
நிலவரமா யண்டத்தில் வேதையாகும்
பனையாத அண்டத்திற் பச்சைசேர்த்து
பாங்காக மெழுகாக்கிற் சோதியாகும்
கனையாத அண்டத்திற் காயசித்தி
கற்பாந்திர காலமெல்லா மிருக்கலாகும்
நனையாத அண்டத்தின் கஞ்சுதன்னை
நாடியறிந் தோர்களவர் சித்தராமே. (21)

ஆமென்ற சரக்குஅறு பத்தினுலும்
அண்டமென்ற முப்பாழால் வேறொன்றில்லை
தாமென்ற அண்டத்தின் வேதைதானும்
சதாநித்த மளவில்லை தாக்கியாடு
ஓமென்ற அண்டமது சரக்கெல்லாமுண்ணும்
ஓரண்டம் சதாநொடியிற் வேதையாகும்
பூமென்ற ஓரண்டம் பொன்னேயாகும்
பூசைக்கு மோரண்டம் பொருந்துங்காணே. (22)

பொருந்தி நின்ற அண்டமது சதாசிவமுமாகும்
புகழான உள்ளொளியா னந்தமாகும்
உருந்திநின்ற உட்பொருள்பீ சந்தானமும்
உருண்டுதிரண் டுருவான ஊமையாகும்
மருந்திநின்ற மகுத்துவந்தா னிதற்கேதென்றால்
மனோன்மணியாஞ் சத்திசிவ முத்தாரத்தால்
அருந்திநின்ற அன்பரெல்லாந் தேடித்தேடி
அறிந்தபொரு ளதுகாணு மாய்ந்துதேறே. (23)

தேறவே அண்டத்தை யறிந்தபேர்கள்
சேருகின்ற இனத்தோடே மெழுகதாக்கில்
பேறவே அண்டதெரி சனங்களாகும்
பேரொளியாங் காய்ச்சியெல்லாம் பிரகாசிக்கும்
காறவே கண்டவர்க்குப் புகட்சியாகும்
கைகண்ட அரம்பொருளின் புகட்சியாகும்
ஆறவே ஆரண்ட மானமாதி
அறிந்தபின்பு பெரும்புவனம் பிண்டமாமே. (24)

பிண்டமாம் பெரும்புவனம் பேரண்டந்தான்
பேரான பொருளஞ்சி லகாரமாகி
கண்டமரங் கலிகன்பதி ஞமாகிக்
கலந்துமே உட்பொருளிற் காட்சியாகி
மூண்டமாம் பொருள்மூன்று சொல்லுமூன்றும்
மும்மூர்த்தி பஞ்சகர்த் தாருமாச்சே
தூண்டமாம் புட்கலைப்பூ ரித்துகல்கி
தொடர்ந்துநின்ற வெட்கலிவீற் றிருந்ததாமே. (25)

வீற்றிருந்த ஐந்தாங்காண்டம் விளம்பக்கேளு
வெகுபுதமை யென்னசொல்வேன் கெருடன்கோழி
நீற்றிருந்த மயில்காக்காய் ஊர்க்குருவியோடு
நிலையாக ஐந்துவிதப் பறப்பினமுமாகும்
ஊற்றிருந்த ஊர்வனத்தின் உண்மைகேளு
உடும்போடு அழுங்காமை முதலீபாம்பு
தேற்றிருந்த திசாஅண்டம் பத்துமாச்சு
சிறப்பாகு மிதன்பெருமை செப்புவேனே. (26)

செப்புவேன் திசாஅண்டக் கூத்தைத்தானும்
சிவன்காணுர் தாய்காணுர் வர்ணமெத்த
அப்பவே அஞ்சுயுக மாடிப்பார்த்து
அடங்காது இதின்வேதை யென்றுயெண்ணி
மப்பவே மனதடக்கி வாதசித்தின்
மகிமைசொல்ல வாக்காலே மூடியாதென்று
விப்பவே தாய்தன்னை விளங்கிக்கேட்க
வேதாந்தி விளம்பரிது யென்றுள்காணே. (27)

காணவே அண்டத்தின் மகிமைசொல்ல
கரையில்லை கணக்கில்லை கொள்ளைகொள்ளை
தோணவே செம்புதனில் வேதையாகும்
சிவப்பாகத் தானிருக்கு மண்டயேமம்
ஆணவே அறுபத்து நாலுமாத்து
அண்டான உபரசமும் பரிசனத்திற்பொன்னும்
நாணவே நவலோகம் பண்ணுகல்லு
நாட்டிடவே பரிசனத்திற் பொன்னுமாமே. (28)

பொன்னென்றுல் முன்னுரைத்த நூற்றுக்குள்ளே
பொலிந்துநின்ற உபசார தீட்சைகெங்கை
மண்ணென்று லாராய்ந்து பொருளையெல்லாம்
மறவாம லேக்நூற்றிற் சொல்வேனப்பா
ஒன்றென்றுல் குருவண்டு சுத்தகெங்கை
ஒழிந்ததினுல் நாள்தோறும் பொய்யாய்ப்போச்சு
கண்ணென்றுல் வழலையென்ற உப்புமூன்றும்
கவனம்வைத்துக் கேளுங்கோ ஐம்பதுண்டே. (29)

ஐம்பதிலே தெட்சணு மூர்த்திசொன்ன
ஐம்பதுண்டே அவருடைய நூலைப்பாரு
தெம்பதிலே பூதபஞ்சி கரணமான
தீட்சையடா சுத்தகெங்கை யிருநூற்றிற்சொன்னுர்
நம்பதிலே வெள்ளைக்கல் பிர்மசற்பம்
நயமாகப் பாடிவிட்டார் கல்லுச்சுண்ணம்
பம்பதிலே சொல்லுகிறேன் பாறையுப்பு
பராபரமா யொன்றுக முடிந்தவாறே. (30)

முடிந்தபடி தெட்சணை மூர்த்திதானும்
முறையோடோ பாடினர் முன்பின்னாக
முடிந்தபடி சொல்லுகிறே னிருநூற்றின்மார்க்கம்
முக்கியமாய் சொல்லிவைத்தார் வகாரமாக
முடிந்தபடி ஆனைக்கல் லறியாரென்றும்
முக்கியமுள்ள பிண்டமது அறியாரென்றும்
முடிந்தபடி உப்புவித்தை அண்டஞ்சாக
முதற்சமைந்த பெண்ணீராற் கொல்லுந்தானே. (31)

கொல்லுமடா அடியென்ற அண்டபிண்டம்
ஓகோகோ பூமியுட நாதமப்பா
வெல்லுமடா குடிப்பதற்குத் தண்ணீருண்டாம்
வெடியுப்பாற் பட்டுவிடுஞ் சாரச்சுண்ணம்
தெல்லுமடா சரக்கெல்லா மிதிலேமாட்டத்
தெளிவாகுங் காயசித்தி மகிழ்ந்துசெய்ய
மெல்லுமடா உபசாரப் பூரீரென்று
மிதமாக வழலையுட பேர்சொன்னாரே. (32)

சொன்னதுவும் பொய்யல்ல மெய்தானப்பா
சொல்லுகிறேன் வழலையுட மகிமையெல்லாம்
பெண்ணதுவு மேழ்பிறப்பு நான்குசாதி
பேசரிய மண்ணல்லோ பூமிநாதம்
பொன்னதுவுஞ் சுத்தசல தீட்சைமார்க்கம்
புவனமே அக்கினியாய்ப் பிறந்தபிண்டம்
சொன்னதுபஞ் சீகரணந் திசைதான்பத்து
சொற்பமென்று நினையாமல் பிரித்துவாங்கே. (33)

வாங்குவது அடிமூல மிதுதானப்பா
வகுத்தபடி நாள்ஒன்று (மூன்றுதரம்) பிரித்துவாங்கு
பாங்குடனே பத்துநாள் தினமிருந்து
பத்தினியாள் சுத்தகெங்கை பெத்திட்டாள்பார்
ஓங்குஉத யாதியினிற் பிறந்தபிள்ளை
உதவுமல்லால் செத்தபிள்ளைக் குயிர்தானுண்டோ
மாங்குவது மதயானைக் கல்லுப்புத்தான்
மறவாமற் பத்துக்கு ஒன்றுமாமே. (34)

ஒன்றுக ரேகித்துப் பிங்கான்றன்னே
ஓகோகோ பௌரணையிற் சமாதுவைக்க
பண்டான அமாவாசைப் பதினேந்தாநாள்
பாரடா சமாதுதனைத் திறந்துபார்க்க
மண்டால பிண்டமது செயநீராச்சு
மகத்தான சாரத்தைக் கொல்லும்பாரு
வண்டான ஆதியுப்பைச் சித்தரெல்லாம்
வகையுனக்குத் தெரியாமல் மறைத்திட்டாரே. (35)

மறைத்தாலுங் கண்டுகொள்வான் யோகியானால்
வகையான யிடிபிறந்த அண்டவித்து
பரைத்துளிரால் வெடியுப்புக் கட்டிப்போச்சு
படிகமென்ற சவுக்கார வழலையாச்சு
கரைத்தாலுங் குருவிதற்கு அடிதான்மூலம்
கவனம்வைத்துச் செய்யுகிற தீட்சையாச்சு
நரைத்தாலுங் குடியிருப்பு மேலேயாச்சு
நலமறிந்த நிலவுப்பின் உப்பினுலே. (36)

உப்பல்லோ கொண்டலுப்பு கூட்டம்சேனீர்
உப்படா வெள்ளையொன்று நீலமொன்று
மப்பல்லோ வேதமறி யார்க்குவீணும்
மகத்தான கள்ளணையுந் தண்ணீர்ப்பந்தல்
தப்பல்லோ காட்டிவைக்குங் கருத்தோணுதா
தானுரைத்த சேதியெல்லாம் ஐம்பதிலேசொன்னேன்
நப்பல்லோ ஐந்நூற்றின் பலனேதென்றுல்
நாட்டினு காசவெடி யுப்பைத்தானே. (37)

வெடியுப்பேஆகாசச் சிவனுருப்பு-விதமாய்க்கூக்குரல்வரட்டு மிது தானண்டம், வெடியுப்பே சத்தியடி யுவர்தான்பிண்டம்- வெற்றியடா சேர்ந்துரெண்டு மொன்றேயானுல், வெடியுப்பே அப்பதினுல் தீட்சையாச்சு-வேர்பரித்துத் திரியாதே யிதுதான்சூட்சம், வெடியுப் பைத்தானறிந்தால் விரைத்துப்போகும் - விள்ளுமடா வெடிக்கிரட் டைக் குண்டுபோட்டால், வெடியுப்பே மதயானை சூதஞ்சாகும்- விரைத்துப்போ முப்புமூதல் புடந்தான்பாரே. (38)

பாரடா பலகோடி அண்டமெல்லாம்
பகர்ந்துபோ மூடலிறுகி வலுத்துக்காணும்
மாரடா செகமுழுதுஞ் செம்பொன்னுக்கும்
மதிமறந்தால் வருகுமோ வாதந்தானும்
ஆரடா சுட்டலிந்தோர் சுளுவைப்பாரு
அறிந்தாலு மெந்நூலிம் பதிற்சொல்சூசூம்
வேரடா வகைதெரியச் சொல்லிவிட்டேன்
விதமுனக்குத் தெரியவென்மூல் ஆகாசஞ்சேரே. (39)

சேரடா மதிநாலு ரவிதான்நாலு
திரமான கல்லுப்பு ரெண்டுகூட்டு
பேரடா முற்குருவு மையுங்கூட்டு
பிலமாக அரைத்தரைத்துச் செயரோலே
ஏரடா தீட்சையது முப்பத்திரெண்டு
என்மகனே காயாதி கற்பமாச்சு
வேரடா யான்சொன்ன நூற்றுக்குள்ளே
விதிப்படியே குப்பிதனி லெரித்துவாங்கே. (40)

வாங்கிடவே சிங்கியென்ற காமமாச்சு
வங்குசிங்கு ரெண்டல்லோ மூன்றுமாச்சு
பாங்கிடவே பராபரத்தின் சுண்ணமாச்சு
பக்குவத்தி னூலேயல்லோ தண்ணீராச்சு
தாங்கிடவே மதியொளியும் பிர்மமாச்சு
தற்பரமும் தாதாரமும் தெரிசிக்கலாச்சு
மாங்கிடவே சம்சார மாயையெல்லாம்
மகத்தான தீவினைக ளொழிந்துபோச்சே. (41)

ஒழியாத மாயமெல்லா மெங்கேபோச்சு
ஓகோகோ வம்புதும்பு ஒழிந்துபோச்சு
பழியான அக்கியானந் தொலைந்துபோச்சு
பரமசிவன் பார்வதியைத் தெரிசித்தாச்சு
வழியான வழியிதுதான் மோட்சவீடு
வந்ததடா மகாமவுனஞ் சித்தியாச்சு
ஈழியான நமனுமங்கே நடுங்கிப்போனான்
ஈழியாது உன்தேகம் ஊழியாலே. (42)

ஊழியென்ன மூப்பினுட சுண்ணத்தாலே
ஒழிக்கவில்லை வெளிதிறந்து சொல்லிவிட்டேன்
பழிவந்தால் வரட்டுமென்று பாடிப்போட்டேன்
பங்கமில்லை வெருசருக்கு அறிந்துபாரு
வழியாக வந்ததடா சிவமாங்கெங்கை
வாதிக்குத் தெரியாது மடங்குமூப்பு
கழியான வகையறியா வேசிமக்கள்
தட்டுண்டு திரிவார்கள் சூடன்றனே. (43)

சூடனென்ற ஈசனுப்புக் கட்டக்கேளு
சூட்சமாம் பீங்கானில் அரைத்துப்போட்டு
பீடனென்ற பிண்டசெய நீர்விட்டுக்கிண்டு
பின்னுமப்பா ரவிமுகத்தி லுலரப்போட்டு
வீடனென்ற விதிப்படியே மூப்பத்திரண்டு
வீதிநின்ற நீரதுவு மதிக்கக்காரம்
மீடனென்ற சூடனதை நெருப்பில்வைக்க
மிக்கசூ டனெரியா லடங்குந்தானே. (44)

தானென்று அடங்கிநின்ற பிறகுதானும்
தானமது மூப்பூவு மிடைதப்பாமல்
கானென்று தெரியாதோ வேசிமக்காள்
கலமாக மூன்றுவித மாகச்சொன்னேன்
வானென்ற ஐந்துகாண்டம் நூற்றுக்குள்ளே
வகையாக முன்சொன்னேன் பின்னும்சொன்னேன்
மானென்ற மூப்பூவு மூன்றுவிதஞ்சொன்னேன்
மக்களே மூன்பின்னுய் வகுத்தேன்பாரே. (45)

வகுத்திட்டேன் மூப்பூவுஞ் செய்புமார்க்கம்
வந்ததடா சுத்தசல மாதியாதி
பகுத்திட்ட குருத்தேடி அலைந்தாலுந்தான்
பண்டுசெடி தான்பிடிங்கித் திரிந்தாலுந்தான்
தருத்திட்ட பற்பவகை செந்தூரங்கள்
தப்பியே நிறங்கெட்டுக் கரியேசுட்டு
மருத்திட்டு வாயுலர்ந்து திரிவதோடு
மக்களே வாதமது பொய்யாய்ப்போமே. (46)

பொய்யென்று யெண்ணுதே யென்மேற்குற்றம்
பொல்லாத பாவிக்குச் சொன்னலுந்தான்
கொய்யென்ற கோசபீசம் நாதவிந்து
குருவழலே தன்னைவிட்டார் குருவாமோசொல்
மெய்யென்று யான்சொன்ன அஞ்சுகாண்டம்
மேன்மையாய்ப் பார்த்தாக்கால் விபரந்தோணும்
வெய்யென்ற ரவியுமதி மங்கிமூன்றும்
வெளிதிறந்து அடையாளஞ் சொன்னேன்பாரே. (47)

சொல்லென்றல் முன்சொன்ன நூறில்தானும்
சொல்லிவைத்தேன் கங்கைநதி யடையாளந்தான்
கொல்லென்றல் தீட்சைக்கு அண்டபிண்டம்
கூடினல் மண்ணல்லோ பொன்னுச்சென்றேன்
ஒல்லென்றல் பசுந்தமண்ணு தண்ணீர்தானும்
ஓகோகோ யிதைவிட்டு அலைந்துகெட்டார்
பொல்லென்ற பூனீற்றைப் பொசுக்கியென்ன
புலையனேப்போ லலைந்துகெட்டுத் திரிவான்பாரே. (48)

திரிவானே புத்திகெட்ட புலையன்மக்காள்
திரிவிதமாம் வாய்வுஅங்கி அப்புமூன்றும்
விரிவான பிண்டத்தில் நின்றதப்பா
வின்பமூள்ள பிருதிவியே பிண்டம்பிண்டம்
பிரிவான தில்லையடா யிதுதான்மூலம்
பின்கலையு மிடகலையு மிரண்டுங்கூடி
மரிவான சுழிமூனையின் கூர்மைதப்பி
மரித்துப்போ னல்வருமோ சிவன்தானே. (49)

சிவனது போகுமட்டுஞ் சுட்டாலுந்தான்
சிவசத்தி தீட்சைதனை யறியமாட்டார்
சிவந்தானும் வேறல்ல மண்ணுந்தண்ணீர்
சிவனிருந்த வழலையுப்பு நெற்றிக்கண்ணும்
சிவன்விபா மின்னதென அறிந்துகொண்டால்
சிவசிவா இதற்குநிக ருண்டோசொல்லு
சிவன்தானு விந்துபஞ்ச மித்திரமென்றும்
சிவன்கொண்ட வன்னிபீஷ மென்றும்பேரே. (50)

போன பேர்நிறைந்த பூரணத்தைப்
பேசித்துச் சித்தரெல்லா மாரூட்டஞ்செய்தார்
மேரென்றும் வஸ்துவென்றும் சாகாக்காலாம்
மேன்மையுள்ள சாரமென்றும் பூரமென்றும்
காரென்ற விதியோடே சொல்லிவந்தேன்
கருத்தோடே செயலறிந்து பார்ப்பாயாகில்
தேரென்று உங்களுக்கும் மற்றோருக்கும்
தெருவிலே சேதியெல்லாம் போட்டேன்பாரே. (51)

பாரேநீ சாஸ்திரத்தை வெளிவிடாதே
பாரிலே ஈய்ந்தாக்காற் பிரமைகொள்ளும்
மாரேநீ தந்தைமுதல் பெண்டுபிள்ளை
மகத்தான ஞாகத்தில் அழுந்துவாய்நீ
ஆரேநீ யிந்நூல்வைத் திருந்தோர்பாதம்
அனுசரித்துக் கோடிதன மீய்ந்துவாங்கு
சேரேநீ கேட்டாலு மீயவேண்டாம்
தெரியிலார்க் கீய்தலினுல் ஞாசமாமே. (52)

ஞாசமாய்ப் போனுனும் நடுக்கமெத்த
நமனும்வந்து கரையேற ஒட்டானப்பா
ஞாசமாஞ் சமூசாரிக் கிதுதானுகா
நாரியர்க ளாசைவிட்ட யோகிக்காகும்
ஞாசமிலா தவத்தையனு சரித்தயோகி
நல்லமுதம் பட்டாக்கால் சிவந்துபோகும்
ஞாசமிலா தவத்தையனு சரித்தோரன்றி
ஞான்சென்னுல் தெரியாது சாபந்தானே. (53)

சாபத்தாற் சொல்லுதற்கு யிடைபாகங்கள்
சந்தேக மில்லாம லேத்தாங்காண்டம்
மாபத்தால் முன்னுரைத்த நூற்றுக்குள்ளே
மக்களே சிங்கிகுரு பாஷைதானும்
தீபத்தாற் சிவகிக்குப் பழச்சாறென்செய்யும்
தீட்சையது செய்யுகிற கைபாகந்தான்
ஞாபத்தாற் காய்ந்தசிங்கி பலத்தானென்று
நலமான சரக்கதுவுங் களஞ்சியொன்றே. (54)

களஞ்சியென்ற திதநா லு மரைப்பலமேயாச்சு
கண்டுகொள்ளு கருவாளி யானுற்றனும்
களஞ்சியென்ற பூரமப்பா குருவுமாச்சு
தயங்காமற் குப்பிவைப்பு நூறிற்பாரு
பளஞ்சியென்ற ஐம்பதவும் நூறும்பார்த்து
பதனமெத்தப் பதனமெத்தக் கைபாகங்கள்
வளஞ்சியென்ற விடைபாகந் தப்பிற்றானல்
வந்ததடா புலிபோலே பாய்ச்சல்தானே. (55)

பாய்ச்சலிலே தின்றுவிடு மொன்றுமில்லை
பார்த்திருந்து பதறுமற் செய்தீரானல்
வாய்ச்சலிலே குருவதுதான் கோடிகாலம்
வாழலாம் குருவுனக்கு வாய்த்ததானல்
மாய்ச்சலிலே திரியாதே மண்ணேபொன்னும்
மக்களே பிரமஉப்பு வெளிமேலாச்சு
ஆய்ச்சலிலே மெத்தவுந்தான் வேணுமோதான்
அந்தரமாஞ் சரக்குக்குப் பணம்போதாதே. (56)

போதுமடா முத்தியு மூன்றுசாமம்
பொங்காற் வெடியாமற் பூண்டுபாரு
ஏதுமடா குப்பிமறு காளிற்பாரு
இப்பவே பதங்கமென்ற குருதானய்யா
நீதமடா ஆதியித துருசுக்காச்சு
நீத்தாட்டால் சுட்டலிங்து கெட்டானப்பா
வீதமடா யென்னசெய்யும் புத்தியில்லா
வீணர்களும் பொய்யெனவே தள்ளுவாரே. (57)

தள்ளினது அவன்பேரிற் குற்றமில்லை
சவுக்கார வழலிதனை மறைத்ததாலே
வெள்ளையென்ற சிவனுப்பு மறைத்ததாலே
வெடியுப்புக் கட்டுவது வில்லாதாலே
கொள்ளியென்ற பூரீரு போனதாலே
குடிமேலே கல்லுப்புக் காணுதாலே
தள்ளியென்ற சுத்தசல நீட்சைமார்க்கம்
சொல்லாமற் போனதினுற் தோணுதென்றே (58)

தோணுகின்ற சித்தர்கள்தான் கூடிக்கொண்டு
சூக்ஷமாய்க் காணுகிற உப்புமார்க்கம்
காணுகின்ற பரிபாஷை காமத்தாலும்
கபடாக முன்பின்னு புகமையாலும்
வேணுமென்றே யவரவர்கள் நூல்கள்தோறும்
விளம்பினர் பூராய மெத்தமெத்த
ஊணுகின்ற உப்பல்லால் வேறொன்றில்லை
ஓளித்ததென்ன வழலையொன்று தீட்சையொன்றே. (59)

தீட்சையென்ற யிந்தநூ லிலந்தாங்காண்டம்
சூல்திரமாய்ப் பாடினதோர் நூறின்மார்க்கம்
பச்சையென்ற நூறதிலே குருவதாச்சு
படிப்படியாய்ச் சொன்னதெல்லா மைந்நூறிற்றான்
மச்சையென்ற மூதற்காண்டம் பிற்காண்டம்நூறும்
மகத்தான ஐந்தாங்காண்டம் கைபாகம்பார்
வச்சையென்ற சூல்திரத்தின் பாஷையெல்லாம்
வகையுடனே சொன்னேனுன் காண்டந்தானே. (60)

காணுகின்ற வகையேது ஆதியுப்புக்
கருவறிந்த வாதிகளே சொல்லக்கேளு
தோணுகின்ற யீசனுப்பு மேலேயாச்சு
தோணுத லிங்கமென்றும் பொன்பூமியென்றும்
பாணுவென்ற படிக்கரவி சுடர்தானென்றும்
பயம்பிறக்கும் காதவிந்து தானுமென்றும்
ஆணுகின்ற ஞானதிருட்டிக் காரர்சொல்லார்
அப்பனே வேறொன்று மில்லைதானே. (61)

இல்லையென்ன சிவரூபம் மூடிதானுச்சு
ஈஸ்வரியாள் ரூபமல்லோ சிவப்புமாச்சு
வில்லையென்ன சொல்லுகிறே னீலவர்ணம்
வேதனுப்பு நடுவாச்சு வேறேயில்லை
மூல்லையென்ற தூரொன்றுக் கவர்கள்கோடி
மூடர்களே ஒன்றல்ல மூன்றுமாச்சு
உல்லையென்ன சொல்லுகிறேன் சத்திஉப்பை
உவரென்று மிர்தென்றும் ரவிதானென்றே. (62)

தானென்ற இந்தவகைப் பேர்களெல்லாம்
தவருமற் சொல்லிவைத்தேன் நூற்றுக்குள்ளே
மானென்ற ஞானிகள்தான் கூடிக்கொண்டு
மகத்தான நூல்பார்ப்பான் தீட்சையாவான்
கானென்ற மவுனமென்று விண்ணைப்பார்ப்பான்
கருசலையாய் விசாரணையை விட்டுவிட்டு
வானென்ற சீவனத்திற் செல்லுவார்கள்
வகையாகப் பெண்ணோடு தயங்குவாரே. (63)

தயங்குவார் பெண்ணுக்காய் வெகுபேச்சுப்பேசி
சமத்தான ஞானமெல்லாம் வந்துதென்பான்
மயங்குவான் பெண்ணுலே சார்வோயில்லை
மகத்தான யோகத்திற் சார்ந்தேனென்பான்
தியங்குவார் வருத்தமுற்றுற் சிவனேயென்பான்
செகசாலத் திரோதாயி சிரிப்பான்கண்டாய்
மூயங்குவார் சமாதிவிட்டே மோசமாச்சு
மூழுமோக மாயையிலே மூழ்குவாரே. (64)

மூழ்கவே மலைதனிலே நாதமுண்டாய்
முழுக்கமா யதபொருமி உதிருங்கீழே
வீழ்கவே மண்ணெல்லாம் பெரும்பாண்டத்திட்டு
மேன்மையாய்க் கரண்டியினுற் துலாவிக்காய்ச்சி
தாழ்கவே குளிவெட்டி அதிலேவைக்கத்
ததும்பாமற் கட்டியா யிருக்கும்பாரு
ஆழ்கவே அடியிலே மண்தானிற்கும்
அப்புறத்தே வீசிவிடு ஆச்சென்றேதான். (65)

ஆச்சென்ற சரீரமது சமாதிக்காக
ஆகாத தூலமது பென்பார்கோடி
ஊச்சென்ற உலகத்தில் ஞானியுண்டோ
உட்புகுந்து நான்பார்த்தே னென்றுமில்லை
வாச்சென்ற வாதம்வந்தால் ஞானமாகும்
வாதமது யில்லாட்டால் வார்த்தையாகும்
ஏச்சென்று உழுதால்வெள் ளாண்மையாகும்
ஏரில்லா னருத்தடித்த யேத்தமாச்சே. (66)

வத்தமா மேத்தாச்சு வாதஞானம்
எளிதிலே சித்தியுண்டோ யோகந்தானும்
காத்தமாங் கைகண்டால் கற்போல்நெஞ்சாம்
கண்டேனு னென்றுசொன்னால் ஒன்றுமில்லை
ஊத்தமாம் அரனுடனே தொழிலேநித்தம்
ஊதுவா னவன்வாதி உண்மையுண்மை
தேத்தமாம் சிவயோகி முனிவர்தானும்
செயலாகப் பொங்கியுண்பான் யோகியாமே. (67)

யோகியாம் வாதியிலே விதமேரெண்டு
உலுத்தனும் வாதியென்ரு லுடுத்திப்பொங்கி
யோகியாம் யோகமென்ன வேதைகண்டு
உதவியில்லாப் பெண்ணேடே கூடிமாய்வான்
பாவியாம் பெண்ணென்ற பக்கம்சென்று
பாட்டோடு கேளிக்கை தனித்துப்பார்த்து
ஈவியாம் பெண்தானே இவன்விரும்பில்
நரகத்துக் கேதுவாய் மாளுவானே. (68)

மாளாமற் பெண்மேலே மயக்கம்விட்டு
மாசற்ற சித்தாந்த வேதாந்தம்பார்த்து
காளாமற் செகசாலம் நரகமென்று
நாட்டமாங் தேவியுட னிரையயிலேநின்றால்
தேளாமற் சடமுதலாய் காமல்லவென்று
செகத்திலே தசதீட்சை கடந்துயேறி
வாளாமற் சிவசொத்தை வறுமைபோலுண்டு
வகையறியோம் வாதமென்ற வண்மைதானே. (69)

வண்மையாய்ச் சதாகோடி தொழிலேச்செய்வார்
வகையேது பொருளில்லே வறுமைக்கென்பார்
உண்மையாய்ச் செந்தூர செயநீர்ச்சுண்ணம்
ஒருவருந்தா னறியாம லடக்கிவைப்பார்
ஆண்மையாய்ச் தொழிலெடுப்பா ரார்க்குங்காட்டார்
அபூர்வந்தான் வாதமென்பா ரனேகம்பேர்கள்
தாண்மையாய் சதாநித்த மறிவிலூணி
சாந்தமா யிருந்தவர்க்குத் தெரிசிப்பானே. (70)

தெரிசிப்பா னித்தனையுந் தள்ளிநிண்ணுல்
தெரியாம லிருந்தாலு மறிவிப்பேனுன்
தெரிவிப்பேன் செய்பாகங் கைபாகங்கள்
தேரினின்ற படியாலே தெரிசிப்பேன்பார்
தெரிசிப்பே னுன்மனதி லுருமைகொண்டு
செயமாக நாட்டிவிப்பே னறிவிற்ருனும்
தெரிசிப்பே னுன்மனதி லுறுதிகொண்டு
தெரிந்தாலு மீஸ்வரியாள் தேரொட்டாளே. (71)

தேரொட்டாள் பூரணியுங் காரணியுந்தான்
நிடப்பட்ட மனதானுற் செப்புவான்பார்
நேரெட்டா னெத்தனைநா ளறிந்தாலுந்தான்
நிசமாகச் சொன்னசொல்லை அறிவிற்தாக்கி
பேரொட்டா நெடுநாளா யுழைத்தாலுந்தான்
பேய்மக்காள் ஞானியென்று நிலைக்கத்தானும்
ஓரெட்டா மிந்தவித மார்க்கங்கண்டால்
ஓகோகோ தெளிவுமெத்த ஞானிதானே. (72)

ஞானமாம் வாதியென்ற மவுனவாதி
நாட்டமாம் பிரபஞ்சத் திருந்தாலென்ன
வானமாம் ரசவாதி யோகவாதி
வந்திடுவாள் பூரணியாம் ஆயிஆயி
சேனியா மவரிடத்தே ஆத்தாள்சொல்வாள்
செகசால முத்திவழி சேர்த்துவைப்பாள்
எனியாம் ரசவாதங் காட்டிவைப்பாள்
எப்படியுஞ் சென்னமென்ற முத்திதானே. (73)

சென்னமில்லை முத்திபெற்ற வாதிக்கென்று
சிவன்தானு மோட்சமென்று செப்பினர்காண்
சென்னமில்லை சிவசொத்தைப் பெண்ணுக்கீய்ந்து
சிறிதான விரையமெல்லாம் பண்ணினுக்கால்
சென்னமுண்டு நரகெய்தும் பாவியோரும்
தெருநாய்போ லேதிரிந்து அலைந்துசாவார்
சென்னமுண்டு நரகெய்தி மாளுவான்பார்
தீர்க்கமாய்ப் பசாசுபோ லலைவான்பாரே. (74)

அலையாம லிருக்கவல்லோ வாதஞ்சொன்னேன்
அகண்டத்தி லிருக்கவல்லோ குளிகைசொன்னேன்
குலையாம லிருக்கவல்லோ ஞானஞ்சொன்னேன்
குணத்தோடே மனம்பிடிப்பான் வாதியாலல்
மலையாம லிருக்கவல்லோ தீட்சைசொன்னேன்
மகிமையுட யிந்தநூ லிலந்தாங்காண்டம்
நிலையாம லருளாமோ பொருளோவென்று
நீமகனே யிருந்தாக்கால் பொய்போகாமே (75)

போகாமே பஞ்சபட்சி பாசாணந்தான்
பொன்கோடி பச்சையிலே வேதையாகும்
நோகாமல் நவலோகம் பத்துக்கொன்று
கொடியிலே விஷங்களெல்லாம் நடுங்கிப்போகும்
வேகாத சரக்கிதுதான் காயசித்தியாகும்
வேதாந்தக் கூட்டத்தி லிருக்கலாகும்
போகாது வாதமது யென்னசொல்வேன்
போட்டதொரு சரக்கெல்லாங் கட்டுந்தானே. (76)

கட்டுமே பஞ்சபட்சி பாசாணத்தால்
காயசித்தி யோகசித்தி கடுசிலாகும்
பட்டுமே லோகத்தில் பாயயேமம்
பாசாணக் குலத்துக்குத் தளவாயாகும்
வெட்டுமே சூதத்தை நிமைக்குமுன்னே
விடுபட்டாற் குளிகையது மிடுக்குமாகும்
தொட்டுமே போட்டிட்டா லேமமாகும்
தூரத்தே யோட்டுமிந்தத் தொந்தந்தானே. (77)

தொந்தமாய் கர்மமென்றுந் தர்மமென்றும்
தொகையிலாப் பிறப்பிறப்பு உண்டென்பார்கள்
கந்தமாய்க் கருச்சொல்வேன் கருதிக்கேளு
கருத்தூனிப் பெரியோர்கள் கண்டுசொல்வார்
பந்தமாய்ச் செந்துக்கள் பிறந்ததெங்கே
பாந்தமாய் பிறந்ததெங்கே யெங்கேபோச்சு
உந்தமாய்ச் சொல்லுதற்கு உலகமெங்கே
உண்மையாய்த் தெளிவாக உரைக்கிறேனே. (78)

உரைக்கிறேன் சராசரங்கள் சீவராசி
உற்றபத புவனமொடு அண்டமெல்லாம்
பிரைக்கிறேன் பூரணத்திற் பிறந்ததாகும்
பிறந்தவித மேதென்றுல் பகரக்கேளு
விரைக்கிறேன் யெழுவகையின் யோனிதாலு
மிக்கான விந்துவதாய் விளங்கும்போதம்
கரைக்கிறேன் மேகசலம் கடல்நீர்போலக்
கலந்துநின்ற செகமெல்லாம் போதமாச்சே (79)

ஆச்சுதே போதமெங்கும் நிறைந்துநின்று
அகண்டத்திற் செனனவகை போக்கக்கேது
ஓச்சுதே நாதத்தி லோங்கிநிற்கும்
ஒண்டிறுல் கல்வினையு மப்போபோச்சு
வாச்சுதே பெண்ணோடு கூடியாடி
மாண்டதொரு பேயருக்குப் பிறப்புண்டாகும்
வாச்சுதே வாருதியிற் சலத்தைமேகம்
வாங்கியே யிரைத்ததுபோற் பிறப்புண்டாச்சே. (80)

பிறப்பதுவு மூண்டாகி மாண்டுதானுல்
பூரணத்திற் றுறுகிப் பின்புமீளும்
திறப்பதுவும் பூரணத்தில் யிச்சைநோக்கித்
திரும்பியே பிறக்கவொட்டாக் கம்பியாச்சு
மறப்பதற்குக் கருவிகளே உதவியாச்சு
மாண்டிறந்து போவதற்கு மோசமாச்சு
பறப்பதுவு மதுவையுண்டு செண்பகத்துள்
பத்திநின்று செத்ததுபோல் செனனம்போச்சே. (81)

செத்ததோர் வாசிகண்டு மும்மூலம்பாரு
செவிநின்ற பூரணத்தை யுற்றுப்பாரு
ஊத்தியதோர் கருவறிந்தால் அவனேயோகி
உற்றுணர்ந்து பார்த்தாக்காற் குளிருமாகும்
வாத்தியதோ ரக்கினியாற் பிறந்தபிண்டம்
வகையுடனே சருகுதள்ளி யேத்திப்பாரு
ஆத்தியதோர் திசம்பத்து நாளிற்றுனும்
அப்பென்ற உப்பதுவை யுணர்த்திக்கொள்ளே. (82)

கொள்ளடா சத்திசிவ மொன்றுய்ப்போச்சே.
கோள்களொன்று மில்லாமற் பத்துக்கொன்று
மொள்ளடா சாரமொன்று பூரமொன்று
மிஞ்சாமற் பூரமதை மடியரேகி
பொள்ளடா பீங்கானில் வைத்துமூடி
புதைத்துமே சமாதபெள ரணியிற்போடு
தொள்ளடா அமாவாசை இருவாரஞ்சென்று
திறந்துபார் மறுநாளிற் செயநீராமே. (83)

செயநீரே யானுக்கால் பிரமக்கல்லைச்
சென்றமட்டுந் தீட்சையிடக் கட்டிப்போகும்
செயநீரே யானுக்கா லிடைபாகந்தான்
செப்புகிறேன் வாதிகளே மகிழ்ந்துகேளு
செயநீரிற் முன்சொன்ன யிடைபாகங்கள்
சேர்த்துவிட்டு மாளவுந்தா னரைத்தரைத்து
செயநீரே தீட்சைவிட்டு மரியரேகி
செகமெல்லா மெய்க்குமிந்த மெழுகுதானே. (84)

மெழுகுமே காயாதி கற்பமாச்சு
மெழுகில்நின்ற யெண்ணய்யது கழன்றுபோச்சு
பொழுகுமே காசியென்ற குப்பிக்கிட்டு
பொருந்தவே நான்சொன்ன நூறிற்றூனும்
தொழுகுமே உரைத்தபடி சீலைசெய்து
தொக்கடா மூன்றுசாம மெரித்துவாங்கி
தொழுதுமே நாற்பத்தி முக்கோணத்தைத்
தொந்தமடா ஆயிக்குப் பூசைசெய்யே. (85)

பூசையது மாறுமற் செய்துகொண்டு
பூரணியின் முன்பாகம் பணிந்திருந்து
பாஷையது மறவாமல் மனங்குவிந்து
பகராமற் செய்துகொண்டால் சிங்கியாச்சு
மாசையது தானகற்றிக் கற்பங்கொள்ளு
மக்களே வயதுமது ஊழிகாலம்
ஓசையது தான்பிறக்கு மண்டகூடம்
ஒன்றுன பிரமக்கல் தீர்க்கந்தானே. (86)

தீர்க்கமாய் நவலோகம் நீற்றிப்போடும்
செப்பரிது சிவப்பாகுஞ் செம்புபோலாம்
கார்க்கமாம் வெள்ளியிலே பத்துத்தொந்தம்
காண்பித்தால் கடைசியிலே யேமமாகும்
மூர்க்கமாம் சூதத்தில் படுமூன்கட்டும்
உபரசத்திற் படுமூன்னே சவீரியாகும்
நார்க்கமாம் லவணமது யிருபத்தஞ்சும்
நடுங்குமே வேங்கைகையி லாடுந்தானே. (87)

வேங்கைகையி லாடுபோல் நடுங்கிப்போகும்
வெகுவித்தை யாராலும் விள்ளொண்ணாது
பாங்கையின்று கண்டவனே வாதயோகி
பருவத்தை யறியாதான் பசாசோடொக்கும்
தீங்கையன்றே சிறுபிள்ளை வியாக்கிரமர்தானும்
செப்பினு ரென்குருவும் புசுண்டர்க்குத்தான்
தாங்கென்ற அய்யருமே யெனக்குத்தானும்
சமத்தெல்லா மடியேற்குச் சாற்றினாரே. (88)

சாற்றியதோர் வகைசொல்வேன் நினைவாய்க்கேளு
சமத்தாக மூலத்தில் நினைவாயது
காற்றியதோர் நடுமூலங் கண்டத்தாணு
கலியாமற் காலதனை யெட்டிற்சேரு
போற்றியதோர் மேல்மூலம் புருவத்தாணு
பூரணத்தின் கீழ்மடங்கிப் போதஞ்சேர்க்கும்
தேற்றியதோ ரிதைவிட்டால் ஞானமில்லை
திருட்டான வாதிக்குச் சேரப்பொய்யே. (89)

பொய்யாகப் போச்சென்பான் ஞானமெல்லாம்
பொன்னுசை பெண்ணுசை மெய்யென்றெண்ணி
மெய்யான உலகத்தி லென்னஞானம்
மிகுத்துரை வேணுமென்றுல் வாசியேரு
கொய்யாகப் பொரியாசை நிலையாமற்கொல்லு
குறியான பதியைவிட்டுப் பாசமூடும்
கய்யாக ஐம்புலனைக் குத்திக்கொல்லும்
கலியாமல் பூதத்தை ஒன்றுய்த்தானே. (90)

தானென்ற யிக்குருவா லெல்லாங்கட்டும்
சமூசயங்களறித்தவனே வாதயோகி
வானென்ற மனதைமெள்ளப் பூரணத்திற்சேர்க்க
வாக்கடங்காப் பூரணந்தான் மேலேயாகும்
நானென்ற பூரணமே யென்றுநாடி
நத்தாமற் சடலம்விட்டு வேறுய்கின்று
காவென்ற காரணத்தை நாமறிந்தோம்
கல்லுகின்ற பிரபஞ்சமெல்லாம் ஓடுமென்றெண்ணே. (91)

எண்ணியே யெரியோர்க்கு வாதஞ்சொன்னேன்
ஏற்றமா மூத்தருக்குத் தொழிலேச்சொன்னேன்
புண்ணியருஞ் சேஷருக்குப் புத்திசொன்னேன்
பூரணத்தி லிருக்கவல்லோ ஞானஞ்சொன்னேன்
நின்னயமாம் பெரியோர்க்குப் பதத்தைச்சொன்னேன்
நிலேயிலாக் காமிக்கு அறிவுசொன்னேன்
வன்னமாய் வழலேமுறை வரிசைசொன்னேன்
வாதிகளுக் குயிரிதவும் வளப்பந்தானே. (92)

வளப்பமாந் தருசுவிட்டால் வாதம்போச்சு
வகையான கம்பிவிட்டால் வேதைபோச்சு
இளப்பமா யோகம்விட்டால் ஞானம்போச்சு
எடுத்தோடுங் குளிகைக்கு யேற்றம்போச்சு
தளப்பமாய் மனம்விட்டால் வாசிபோச்சு
சொரூபத்தைப் பாராட்டால் யெல்லாம்போச்சு
தளப்பமாங் குருவைவிட்டாற் புடசெயங்களாகா
தனிக்காய சித்திவிட்டால் வாதம்போச்சே. (93)

வாதம்விட்டால் யோகநிலே ஞானம்போச்சு
மகத்தான பசியுற்று மயக்கமாச்சு
காதம்விட்டால் மனக்குரங்கு பசித்ததாலே
கனித்துமே மனமலேந்து கவிர்மெந்தாகும்
பாதம்விட்டால் பராபரத்தின் முகத்தைப்பாரார்
பாழிலே போய்விடுங்காண் பரமஞானம்
நீதம்விட்டால் மந்திரங்கள் சித்தியில்லே
நிலேயாட்டால் பசாசாச்சு நினேவாய்ப்பாரே. (94)

பாரப்பா வாதத்துக் கிதுவேபோக்கு
பாங்கான வாதசித்தி ஞானசித்தி
காரப்பா யென்குருவும் புசுண்டர்னுயன்
கருவெல்லா மனதூணி விரித்துப்பார்த்தேன்
வேரப்பா குருசொல்லக் காணவேணும்
விதவிதமாய்ச் சுட்டாலுங் காணமாட்டார்
காரப்பா தூக்கோடே பால்குடித்த
நாய்போலே சுழன்றுமே திரிவார்தானே. (95)

திரிந்துமே சுடுகிறதோர் வாதிகோடி
நிறமில்லா மனதான ஞானிகோடி
விரிந்துமே விட்டகுறை தண்ணியாலே
விந்தென்ற நாதமது ரெண்டுமாகி
தெரிந்துமே இதனருமை பெருமையெல்லாம்
சிறப்போடு எண்ணிமன தோர்மையாக
மரிந்துமே மகாமவுனம் விரித்துவாழ்த்து
மகத்தான பூரணமா மொன்றுங்காணே. (96)

ஒன்றுன ரோமபுரி கடலுக்கு மேற்கு
ஓமென்ற கிணராச்சு அகலங்கேளு
அன்றுன பதினாறு முழத்தின்கீழே
அழத்தமுள்ள கிணருச்சு யேமமாச்சு
பன்றுன சகலருந்தா னெடுத்து உண்பார்
பரமசிவன் தாயுமங்கே யிருப்பாள்பாரு
மன்றுன சிவகணத்தைப் பூதந்தன்னை
மருவியெடா மற்காவல் வைத்தார்காணே. (97)

காணவே பத்திலொன்று சீனதேசம்
கடிந்துமண் தண்ணீரிற் கரைந்துபோச்சு
நாணவே ரசமென்றுல் சத்தவேதி
ரசேந்திரனுந் தெரிசனமாம் வேதியாகும்
பாணவே பராபரந்தான் பரிசவேதி
பாங்காகச் சூதமுமீ சுரமுந்தானும்
தோணவே அறுகாண்டம் பெத்தபேதி
தோற்றுமடா வேதையுமே சித்தியாமே. (98)

சித்தியாய்ச் செய்வதா ரைத்துகாண்டம்
செயலுடனே பார்த்தவர்கட் கெய்துமெய்தும்
பத்தியாய்ச் செய்வதா ரிந்தநூலைப்
பதிமூலம் வரைபார்த்தோர்க் கெய்துமெய்தும்
முத்தியாய்ச் செய்வதார் முதலிரண்டுகாண்டம்
முனியான கடைசிஐந்தா வ காண்டந்தானும்
மத்தியாய்ச் செய்வதார் மூன்றுகாண்டம்
மக்களே பார்த்தவர்க்குச் சித்தியாச்சே. (99)

சித்தியாம் பரிபாஷை ஐந்தாங்காண்டம்
சிறப்புடனே சொல்லிவிட்டே லுலகத்தோர்க்கு
பத்தியாய்த் தெரிந்தவனே சித்தனுவான்
பாருலகி லிவனுக்கீ டுண்டோஅப்பா
புத்தியா யிக்கருவை வெளிவிடாதே
பூவுலகி லிந்நூலைக் கொடுத்திடாதே
எத்திசையு மிந்நூல்போற் கிட்டிடாது
என்மகனே பரிபாஷை ஐந்தாறுமுற்றே. (100)

உரோமரிஷி பரிபாஷை

ஐந்தாங்காண்டம் 100 முற்றிற்று.

உரோமரிஷி பரிபாஷை 300

(முற்றிற்று)

பரமபதி துணை.

NEW CATALOUGE OF BOOKS.

புதிய புத்தக கேட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனர் ஸன்

மதுரை புதுமண்டபம், புத்தகஷாப்,

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

சித்தவைத்திய அகராதி.

(இது ஓர்பெரிய வைத்திய அகராதி.)

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் 4448 வியாதிகளின் பெயர் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன் 280 பக்கங்கள் கொண்டது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பரிபாஷை 300.

ஒலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளி வந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது,

புத்தகம் 1-க்கு விலை அணை 0—8—0

இ. ராம. குருசாமிக் கோனார் வரன்

திருவள்ளுவர் கற்பம் 300

இதில் ஞானாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, மூப்பு சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, மூப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் மூப்பு விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 0—14—0

யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப் பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளி வராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக் கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள் ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், மூப்பு விபரங்கள் கூறி யிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத் துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைக ளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்திரம்.

புத்தகம் 1க்கு விலை அணு 0—12—0

குரு. இராமசாமிக் கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

இதுவரை எட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்து கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அகேக வைத்தியம், வாதம், சத்குரு மித்குரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள மூக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 இடைத்ததை மாத்திரம் வெகுகாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காமலிருந்து இப்பொழுது ஒரு எட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அகேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்று புத்தகம். 1-க்கு விலை அணா 0—10—0

அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை ஸ்தாபித்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப நீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கரு மான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

ஷையார் சிவயோகம் 200 புத்தகம் 1-க்கு அணு 0—6—0

விஷவைத்திய மென்னும்

"ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், கட்டுவக்காளி, நரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, நரி, மூத லானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குலகுவான முறைக ளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்ப தோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அனுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2—0—0

புலஸ்தியர் கற்பம்300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இத்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, தூருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் காகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினுல் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷியாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளர்கத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் விநோதமாயும் சூட்சமமாயும் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எத்தவிதத்தில் மூரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய சிஷாயங்களும் அதசமயம் ஸ்நானம் செய் யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங் களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகம் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—10—0

அகத்தியர் ஐந்து காவ்ஸ்திரங்கள்.

மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரகை 18 க்கும், குணமும் நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும், அடங்கியது. (ஆ 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்க ளில்லாது கடைச் சரக்கு களைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்க களையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினுல் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், லேவாலே வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவர வர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடங்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—12—0

காக புசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. இவரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுதகாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்களுக்குத் தாத்பரியங்களையும் விளவிடையாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—10—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள் பின்பு யூனிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்தி சுளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி செம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள் ளீப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினுல் வகாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அனேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத் தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும், இப்பொ ழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணு0—8—0

அகஸ்தியர் பூஜா விதி 200.

ஞான சைதன்யம் 51 ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் சிதம்பர பூசையும் அஷ்ட கன்ம பூஜா விபரங்களும் தேவி பூஜா மார்க்கமும் மவுன யோக ஞான சாதன விபரங்களும் தெளிவாய்க் கூறியுள்ளது. விலை ரூ 0—8—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—3—0